Free Circulation Germany- England
மணி: 71 - ஓசை: 295 சித்திரை. April. 2021

# வெற்றிமணி

Vettimaniy
ESTD 1950
27TH years IN EUROPE Successful Publishing
பிரதம ஆசிரியர் கலாநிதி மு.க.சு.சிவகுமாரன். B.F.A

Orientalisch
Textilien & Schmuck
30 ஆவது ஆண்டு நிறைவு
என்றும் எம்முடன் தொடர்பில் இருங்கள்

Königswall 16 (Am Hbf) 44137 Dortmund
Tel:0231 162377

# ஒரு மனிதன் சராசரி எத்தனை பொய்களைத் தான் சொல்கிறான்

யேர்மனியில் தேர்க்காலம் 2021

Dr.IN



அனைவருக்கும் இனிய தமிழ் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்



cricket world cup 1996



அபிநயக்ஷேத்ராவின் முதல் மாணவி ஆரணி

# யேர்மனியில் தெரிந்தும் தெரியாமலும் சேர்ந்த பணம் 5 மில்லியன்

● மாதவி

யேர்மனியில் பிளாஸ்டிக் போத்தலில் தண்ணீர்வாங்கினால் அந்தப் போத்தலுக்கு 25 சென்ஸ் தனியாக எடுப்பார்கள். அதனைத் திருப்பிக்கொடுத்து அந்த வெறும் போத்தலுக்கு 25 சென்சைப் பெற்றுக்கொள்ளலாம். இது பிளாஸ்ரிக் போத்தல்கள் உலகை மாசுபடுத்துவதை தவிர்ப்தற்கான ஒரு வழிமுறை. இதனை யேர்மனி பின்பற்றுகின்றது.

லிடில் அல்லது அல்டி கடைகளில் நாளாந்தம் இந்த போத்தல்களை திருப்பிக்கொடுத்து விட்டு அந்தப் பணத் திற்கும் சேர்த்துப் பொருட்கள் வாங்கிச் செல்வார்கள்.

நானும் அந்த வரிசையில் வெறும் போத்தல்களுடன் நின்றேன். ஒரு இளம் குடும்பம் தனது சிறு மகளுடன் வந்து வெறும் போத்தல்களைப் போட்டுக்கொண்டு நின்றனர். மகள் தான் போடவேண்டும் என்று அடம்பிடிக்க அந்தப் பெண் தான் போட்டு முடிந்தவற்றுக்கான பணத்தை பொத்தானை அமத்தி



எடுத்தக்கொண்டாள்.

சிறுபிள்ளையின் ஆசைக்கு ஒரு போத்தலைக் கொடுத் தார். மகள் போட்டுவிட்டு பட்டிணை அமத்தினாள். அது காசுக்கான துண்டு வரவில்லை, அது மாறாக தர்மத்திற்கு சென்றுவிட்டது. பிள்ளை [Spende] தர்மத்திற்குரிய பட்டிணை எங்கோ பார்த்துக்கொண்டு அமத்திவிட்டது.

தாய்க்கு கோவம் தாங்க முயடிவயில்லை. அது போட்டுது! தர்மத் திற்குப் போட்டுது. என்ன வேலை செய்தாய் என முகம் கடுகடுக்க, மகளைப் பேசினாள். மகள் அம்மா! போனது வெறும் 25 சென்ஸ்தானே! ஏன் அதுக்கு கத்துகின்றாய் என்று ஆவேசமாக கேட்டது.

தாய் நிதானமாச் சொன்னாள் 'போனது 25 சென்ஸ்தான் ஆனால் அதை தெரிந்து தர்மத்திற்கு நீ போட்டிருந்தால் நான் மகிழ்ந்திருப்பேன், தெரியாமல் போட்டதும், அது வெறும் 25 சென்ஸ் தானே என்றதும் தான் பிழையான கருத்து' என்றாள்.. எப்பவுமே நன்மை என்றாலும் தெரிந்துதான் செய்வேண்டும். அந்த யேர்மன் பெண்மணி சொன்ன வார்த்தைதான் இந்த விரிவான கட்டுரை. உயில் எழுதுவதாக இருந்தால் உணர்வோடு எழுதவேண்டும் என்று ஒரு விதிமுறை உண்டல்லவா!

தீமையைச் செய்து விட்டு அடஅதற்கு நாம் என் செய்வது, ஆண்டவன் நமது வடிவில் அவர்களைத் தண்டித்துள்ளான். அல்லது அவர்கள் வினைப்பயன் அப்படியக இருக்கலாம். தம்மால் தீமை அவர்களுக்கு ஏற்பட்டது என்று எண்ணி தமது நின்மதியைக் கலைக்கமாட்டார்கள்.

அதிகமாக பிச்சைக்காரர்கள் பிச்டிசாக்காரர்களுடன் நின்று பிச்சை எடுப்பதில்லை. காரணம் பணக்காரனுக்கு முன்பு தான் சில பணக்கார்கள் அவர்கள் பார்க்கப் பிச்சை போடுவான். அதுவும் அதிகமாகப் போடுவான். பணக்காரர்களது மனநிலையை நன்குபடித்தவர்கள் இந்தப் பிச்சைக்காரர்கள்.

நம்மில் பலருக்கு இப்படியான சந்தர்ப்பம் வந்திருக்கலாம். நன்கொடைக்கு வருபவர்களுக்கு, அள்ளிக் கொடுத்துவிட்டு [ முகத்திற்காக] பின் முகம் மறைந்த பின், அட அதிகமாகக் கொடுத்து விட்டோமோ?

அல்லது விடுமுறைக்கு ஊருக்குசென்று அட இனபந்துகளுக்கு நீங்கள் அதிகமாகவே அள்ளிக்கொடுத்திட்டீர்கள். கொஞ்சம் எண்ணிப் பார்த்தீர்களா? நாம் இங்கு அவர்களைவிடக் கீழாக அல்லவா இருக்கின்றோம்.

இப்படி கலங்கி நிற்கின்றது மனசு.

தெரிந்து செய்யும் நன்மையே இப்படி என்றால்? தெரியாமல் நன்மை செய்துவிட்டால் எப்படி இருக்கும். நமது குணம் தெரிந்த ஒரு பிரபல நிறுவனம் இப்படிச் செய்துள்ளது. இனி முன்னுள் செய்திக்கு வருவோம். யேர்மனியில் லிடில். அங்கு வாங்கும் பிலாஸ்ரிக் போத்தல்களை [தண்ணீர், யூஸ்போத்தல்] பாவனைக்குபின் திரும்பிக் கொடுத்தால் போத்தலுக்கு 25 சென்ஸ் கிடைக்கும். அதற்கு என பிரத்தி யேகமாக போத்தல் போட [தன்னியக்க இயந் திரம் உண்டு].அதன் வாயிலில் போத்தலை நுளைத்து விட்டால் அது போத்தலை உள் இழுத்துவிட்டு அதற்குரிய பணம் எவ்வளவு என்று காட்டும். நாம் அதில் உள்ள ஒரு பட்டிணை அமத்தினால் அதற்குரிய ஒரு பில்போல் அச்சடித்து தரும். அதனை கடையில் கொடுத்தால் காசு தருவார்கள். சிலசமயங்களில் 15 யூரோவிற்கு மேலும் வரும்.

இதில் முக்கியமானது என்னவென்றால் நீங்கள் இந்தப்பணத்தை எடுக்காது அப்படியே அதனை உலகில் உள்ள வறிய மக்களுக்கு நன்கொடை யாகவும் வழங்க முடியும். ஆனால் அதனை அறியாது எங்கோ பார்தபடி காசு க்குரிய பட்டிணை அமைத்துவதற்குப் பதிலாக, காசை நன் கொடைக்குரிய பட்டிணை அமத்தி விடாமல் இருக்க, அந்த நன்கொடை பட்டிணை, நமது விரல் தெரியாமல் அமத்துவதை தவிர்க்க, ஒரு கவசம் உண்டு. அது ஒரு பாதிக்குடை போல் அந்த பட்டிணை முன்பக்கமா மறைத்து இருக்கும். எனவே நீங்கள் உண்மையில் போத்தலுக்குரிய பணத்தை வறிவர்களுக்கு நன்கொடையாக வழங்க விரும்பினால் மட்டும், உங்கள் விரலை அந்த பாது காப்பு கவசத்திற்கு உள்பக்கமாக விட்டு சிரமத்தின் மத்தியில் அந்த பட்டினை அமத்தி அந்த நன்கொடையை வழங்கலாம்.[சிறுபிள்ளைகளது விரல் இலகுவாக அதனுள் சென்றுவிடும்.]

இவ்வளவு தூரம் நீங்கள் தவறுதலாக, விரும்பாமல் நன்கொடை வழங்குவதை தவிர்ப்பதற்கான முன்னெச்சரிக்கை யாக அந்தக் கவசம் விளங்குகின்றது. உண்மை தான் கொடுக்கும் போது தெரிந்தே கொடுங்கள்.

**பி.குறிப்பு:** தெரிந்தும் தெரியாமலும் பொத்தானை அமத்தி யேர்மனியில் தர்மம் செய்தவர்களது பணம் கடந்த 4 ஆண்டில் 5 மில்லியன் யூரோவாகும்.

## வெற்றிமணியின் இதய அஞ்சலிகள்



பிறப்பு 01. 03. 1966

இறப்பு 16. 03. 2021

### சின்னத்துரை கிரிதரன்

( RKL IMMOBILIEN)

வல்வெட்டித்துறை பொலிகண்டியை பிறப்பிடமாகவும் (Germany) இல் உள்ள (Hannover) நகரை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை கிரிதரன் 16.03.2020 இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் பொலிகண்டியைச் சேர்ந்த சின்னத்துரை, சூரியகாந்தி (குகன் குடிசை) ஆகியோரின் அன்பு மகனும், வல்வெட்டித்துறை அம்மன் கோவிலடி, மதவடியை சேர்ந்த கணேசலிங்கம் அன்னரெட்னம் ஆகியோரின் அன்பு மருகனும் ஆவார்.

அன்னார் ரூபிகாவின் அன்பு கணவரும் விஷாயினி, அம்பிகன் ஆகியோரின் அன்பு தந்தையுமாவார்.

அன்னாரின் மறைவிற்கு
வெற்றிமணி அஞ்சலி செய்கிறது.






வெற்றிமணி

தமிழ் எங்கள் உயிருக்கு மேல்

ஓசை : 295



ஆரம்பம்: 1950

ஸ்தாபகர்
அமரர் மு.க.சுப்பிரமணியம்
( முன்னாள் அதிபர்: குரும்பசிட்டி பொன். பரமானந்தர் வித்தியாலயம்)

பிரதம ஆசிரியர்
'ஓவியக்கலைவேள்'
கலாநிதி
மு.க.சு.சிவகுமாரன் B.F.A
Chief Edito:
Dr.M.K.S.Sivakumaran B.F.A

Tel: +49 01631992333

+49 01631992333

e-mail: vettimaniy@hotmail.com

"வெற்றிமணிமொழி'
தோல்வியைக் கண்டு அஞ்சுபவர்களிடமிருந்து வெற்றி தானாகவே விலகிச்செல்கிறது

Vettimaniy Ltd
Company No: 8876276


# ஒப்பரேஷன் 'பூ மாலை'க்கு அடையாளமிட்ட பரதனின் 'நிதர்சனம்' தொலைக்காட்சி கோபுரம்

அனந்த பாலகிட்ணர்

**1987** ஆம் ஆண்டு ஜூன் மாதம் 4ஆம் திகதி பிற்பகல்வேளை, யாழ்ப்பாணக்குடாநாட்டின் வான்வெளியை ஊடறுத்தவாறு இந்திய விமானப்படையின் மிராஜ் போர் விமானங்கள் சிலவும், ஓரிரு அன்டநோவ் போக்குவரத்து விமானங்களும் அசுர வேகத்தில் நுழைந்தன. 'ஒப்பரேஷன் லிபரேஷன்' என்ற தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான முதலாவது பரந்துபட்ட இராணுவ நடவடிக்கை, வடமராட்சி பிரதேசத்தில் ஆரம்பிக்கப்பட்டிருந்த தருணத்தில், அச்சத்தினால் உறைந்து போயிருந்த வடமாகாண மக்களுக்கு மனத்தைரியத்தை தருவதுபோலவே இந்திய விமானப்படையின் உணவு மற்றும் மருந்து பொருட்களை வானிலிருந்து யாழ்குடா நாட்டினுள் போடும் நடவடிக்கை அமைந்திருந்தது.

மிகவும் துல்லியமாக, காரைநகர் கடற்படை முகாமுக்கு மேலாக உள்ள வடமாகாண வான்வெளியை ஊடறுத்த இந்திய விமானங்கள், இருபது நிமிடங்களுக்கும் குறைவான நேரத்தில் தமது கைவரிசையை காண்பித்து விட்டு, வந்த வேகத்திலேயே மீளவும் இந்திய வான் பரப்புக்குள் நுழைந்து கொண்டன.

## ஒப்பரேஷன் 'பூ மாலை'

இந்தியாவின் இந்த மின்னல் வேக விமானப்படை நடவடிக்கைக்கு ஒப்பரேஷன் 'பூ மாலை' எனப்பெயரிடப்பட்டிருந்தது. இந்திய விமானங்கள் உணவு மற்றும் மருந்து வகைகளை ஏற்றியவாறு யாழ் குடா நாட்டின் வான்பரப்புக்குள் நுழைந்ததும் அவற்றை தரையில் போடுவதற்கு ஓர் அடையாளத்தை மையப்படுத்த வேண்டிய தேவை இந்திய விமானிகளுக்கு ஏற்பட்டிருந்தது. அப்போது அவர்கள் வானிலிருந்து தேர்ந்தெடுத்த முக்கிய அடையாளமே நேற்று முன்தினம் திடீரென மாரடைப்பினால் லண்டனில் காலமான இராஜநாயகம் பரதன், கொக்குவில் புகையிரத நிலையத்துக்கு அருகே அமைத்திருந்த, அகன்று மிக உயரமாக அமைந்திருந்த தமிழீழ விடுதலைப் புலிகளின் 'நிதர்சனம்' தொலைக்காட்சி அஞ்சல்



கோபுரம் என்பது குறிப்பிடத்தக்கது.

எண்பதுகளின் நடுப்பகுதியில், மிகக் குறைவான வளங்களோடு அடிக்கடி மின்சாரத் துண்டிப்புகளும் இடம்பெற்றுக்கொண்டிருந்த காலப்பகுதியில் வடமாகாணத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளின் தொலைக்காட்சி, வானொலி ஊடகத்துறைக்கு உரமூட்டியவர் இ. பரதன் என்பது குறிப்பிடத்தக்கது. 'ஈழ



நாடு' பத்திரிகையில் கடமையாற்றிக் கொண்டிருந்த சமயம் ஒருநாள் இரவுவேளை, மானிப்பாய் வீதியில் அமைந்திருந்த ஈழநாடு அலுவலகத்துக்கு பரதன், தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறை முக்கியஸ்தராக இருந்த இ. பார்த்தீபன் என்ற இயற்பெயரைக்கொண்டிருந்த திலீபன் சகிதம் வந்திருந்தார்.

## ஊடக மகாநாடு

அப்போது, ஈழநாடு செய்தி ஆசிரியர் கே. ஜி. மகாதேவாவுடன் இரவுப்பணியல் ஈடுபட்டுக்கோண்டிருந்தபோது திலீபனும், பரதனும் எம்மருகே வந்து, தமிழீழ விடுதலைப் புலிகளின் நிதர்சனம் தொலைக்காட்சியின் ஆரம்பம் குறித்த ஊடக மகாநாடொன்று நல்லூரில் அமைந்துள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் அலுவலகத்தில் இடம்பெறும் என அறியத்தந்தனர். அச்சமயம் திலீபனிடமும், பரதனிடமும் என்னை அந்த ஊடக மகாநாட்டுக்கு அனுப்பி வைப்பதாக கூறி, மறுநாள் காலை அம் மகாநாட்டுக்கு போகுமாறு செய்தி ஆசிரியர் மகாதேவா எனக்குப் பணித்தார்.

நிதர்சனம் தொலைக்காட்சி அறிமுகம் குறித்த அந்த ஊடக மகாநாட்டில் பங்குபற்றியமை இன்றுங்கூட மனதில் பசுமையாக இருக்கின்றது. அம் மகாநாடு தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ் மாவட்ட தளபதியாகவிருந்த கிட்டு என்ற புனைபெயரைக்கொண்டிருந்த சதாசிவம் கிருஷ்ணகுமாரினால் நடத்தப்பட்டிருந்தது. அப்போது, தமக்கேயுரிய புன்முறுவலுடன் ஊடகத்துறை மகாநாட்டை நடத்திய கிட்டு, தமிழீழ தொலைக்காட்சி சேவையின் பெயர் 'நிதர்சனம்' என தெரிவித்ததோடு நிதர்சனம் என்பதன் அர்த்தம் 'உண்மை' எனக் கூறி மேலும் விளக்கமளித்தார். அச்சமயம் நிதர்சனம் தொலைக்காட்சியை வடிவமைத்த பரதன் யாவற்றையும் தமக்கேயுரிய மெலிதான புன்னகையோடு அமைதியாக செவிமடுத்தவாறு கேட்டுக் கொண்டிருந்தார்.

## களத்தில் பரதன்

பரதன் தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கியமான நிகழ்வுகளை துல்லியமாக நிதர்சனத்தில் பதிவேற்றி வந்தார். அவருக்கென ஓர் ஊடக அணியொன்று காணப்பட்டிருந்தபோதிலும், தமிழீழ விடுதலைப் புலிகளின் அன்றைய முக்கிய நிகழ்வுகள், மற்றும் சந்திப்புகள் என்பவற்றை பரதனே அன்று முன்னின்று தமது தொலைக்காட்சி புகைப்படக் கருவியை தோளில் சுமந்தவாறு நிகழ்வுகளை பதிவு செய்திருந்தார்.

எண்பதுகளின் நடுப்பகுதியில் கிளிநொச்சிப்பகுதியில் கொக்காவில் பகுதியில் அமைக்கப்பட்டிருந்த தேசிய தொலைக்காட்சியான

26 ஆம் பக்கத் தொடர்ச்சி...




சம்பவம் 08

கே.எஸ்.சுதாகர்
(மெல்போன்– அவுஸ்திரேலியா)

# கோபுர தரிசனம்

பாலம் ஒன்றைக் கடந்தவுடன், கோபுரம் மெதுவாகத் தெரிய ஆரம்பித்தது. 'இன்னும் ஐந்து நிமிடங்களில் போய்விடலாம்' என்றான் சாரதி. இளம்பூரணன், கீத்தா, இரண்டு பிள்ளைகள் என சாரதியைத் தவிர்த்து நான்கு பேர்கள் வாகனத்தில் இருந்தார்கள். இரண்டுநாட்கள் கோவிலுக்கு அருகாமையில் இருக்கும் தங்குமிடத்தில் இருந்து, கோவிலைத் தரிசிப்பது என்று திட்டமிட்ட பயணம்.

கோபுரம் முழுமையாகத் தெரிந்த கணப்பொழுதில், 'இதற்கு மேல் வாகனத்தில் செல்ல முடியாது. கோவிலைச்சுற்றி பாதுகாப்பு அரண்கள் அமைத்திருக்கின்றார்கள்' என்றபடி சாரதி வாகனத்தை ஒரு ஆலமரத்தின் கீழ் நிற்பாட்டினான்.

'அப்ப இங்கிருந்து நடந்தே போகவேண்டுமா?' ஏக்கத்துடன் கேட்டான் இளம்பூரணன்.

'இவ்வளவு பொதிகளையும் எப்படித் தூக்கிச் செல்வது?' கீத்தா புலம்பினாள்.

பொதிகளை இறக்கி, சடை விரித்திருந்த ஆலமரத்தின் அடியில் வைத்தார்கள். 'அப்பனே முருகா!' கோபுரத்தை நோக்கிக் கரம் கூப்பினார்கள். புலரிப் பொழுது, சூரியக்கதிர்கள் கோபுரம் மீது படிந்து தகதகவென்று மின்னியது. இரவு பெய்திருந்த மழையினால் மணல்தரை நனைந்திருக்க, சாரதி வாகனத்தைத் திருப்பும் சரசரவென்ற சத்தம் கேட்டது. அவன் காரியம் முடிந்தது. திரும்பிவிட்டான்.

'நாங்கள் இங்கேயே நிற்கின்றோம். நீங்கள் ஒவ்வொரு பொதியாகக் கொண்டு போய் வையுங்கோ. கடைசியாக ஒன்றாகப் போகலாம்' கீத்தா சொல்லிக் கொண்டிருக்கும் போது, 'ஹடுக்கு டுக்கு' என்ற சத்தத்துடன் ஒரு ஓட்டோ வந்து அருகில் நின்றது.

'சார்... கோவிலுக்குப் போக வேண்டுமா? ஏறுங்கோ' ஆட்டுத் தாடியும் காதில் கடுக்கனுமாக ஓட்டோவுக்குள் இருந்து குரல் வந்தது.

'கோவிக்குக் கிட்டவா கொண்டுபோய் விடுவியா?'

'பின்ன...! இவ்வளவு பொருட்களையும் நீங்கள் ஒவ்வொண்டாக் கொண்டுபோய்ச் சேர்க்க அரைமணித்தியாலம் பிடிக்கும். நான் உங்களை ஐஞ்சு நிமிசத்திலை கோயிலுக்குக் கிட்டவா கொண்டுபோய் விடுவன்'. நாங்கள் நாலுபேரும், இவ்வளவு சாமான்களும் உன்ரை ஓட்டோவுக்குள் ஏறுமா?

இதென்ன கதை... சார், நீங்கள் என்னோடை முன்னுக்கு வாங்கோ... உவ உங்கடை மனிசி தானே! அவவும் பிள்ளையளும் பின்னுக்கை இருப்பினம். பொதியளை காலுக்கையும் கையுக்கையும் வைச்சிருங்கோ. இடம் காணாட்டி மேலுக்கும் போடலாம்.



ஆலமரத்தடி வெறுமையாகியது. ஓட்டோ ஓட்டகத்துக்கு இடம் குடுத்த கதையாக பிதுங்கிப் போனது. ஓட்டோக்காரன் பயணத்திற்கான காசை முன்கூட்டியே பெற்றுக்கொண்டது இளம்பூரணனைச் சங்கடத்தில் ஆழ்த்தியது. அவன் ஓட்டோவை எடுத்துக் கொண்டு வந்தவழியே ஓடத் தொடங்கினான். பெரிதாகத் தெரிந்த கோபுரம் சிறுக்கத் தொடங்க, இளம்பூரணனுக்கு சந்தேகம் வலுக்கத் தொடங்கியது. 'இவன் எங்களை ஏமாற்றப் போகின்றான்' என மூளை சமிக்கை செய்தது. பொறுமையாகக் கடிகாரத்தையும் கோபுரத்தையும் பார்த்தபடி இருந்தான்.

'என்ன ஐஞ்சு நிமிஷத்திலை போகலாம் எண்டாய்... இப்ப பத்து நிமிஷமாப் போச்சு....'

'சார்... நீங்க வந்த வழியாத் திரும்பி, பிறகு கோயிலை நோக்கிப் போகவேணுமல்லவா!' ஓட்டோக்காரன் நாறல்வாயன் ஆனான்.

'கஞ்சா அடிச்சிருக்கிறானோ?' என அவனை முகர்ந்து பார்த்துக் கண்டுபிடிப்பதற்குள், பதினைந்து நிமிடங்கள் கழிந்தன. அப்பொழுது கோபுரம் மெதுவாகத் தலை நீட்டியது. இளம்பூரணனுக்கு மூச்சுத் திரும்பியது. மனைவியும் பிள்ளைகளும் இளம்பூரணைப் பார்த்தபடி பேயறைந்தது போல் இருந்தார்கள். கோபுரம் மீண்டும் முழுசாகத் தெரிந்தபோது, இதுக்கு மேலை ஓட்டோ போகாது சார்... இறங்குங்கோ! என்றான் இவனும்.

'அப்ப நாங்கள் எண்ணண்டு போறது?' கீத்தா பெரும் குரலெடுத்து சத்தமிட்டாள்.

'பொதிகளையும் தூக்கிக் கொண்டு, உந்தப் பாதுகாப்பு அரணைக் கடந்து போங்கோ' சொல்லிக்கொண்டே பொதிகளை இறக்கித்தள்ளிவிட்டு, ஓட்டமெடுத்தான் ஓட்டோக்காரன்.

'அப்பா... அங்கை பாருங்கோ' என்றார்கள் பிள்ளைகள். அவர்கள் சுட்டிய திசையில், பத்து மீற்றர் தூரமளவில், அவர்கள் முதலில் வந்திறங்கிய ஆலமரம் சிலிர்த்துக் கொண்டு நின்றது. இளம்பூரணன் விதிர்விதிர்த்துப் போனான்.

# இலங்கைக்கு எதிரான ஐ.நா. தீர்மானம் நிறைவேறியது

## இந்தியா புறக்கணிப்பு



இலங்கை உள்நாட்டுப் போரின் போது நடந்த மனித உரிமை மீறல்கள் தொடர்பாக அந்நாட்டு அரசுக்கு எதிராக ஐ.நா. மனித உரிமைகள் கவுன்சிலில் கொண்டு வரப்பட்ட தீர்மானம் 22க்கு 11 எனும் அடிப்படையில் நிறைவேறியது.

இந்தியா, ஜப்பான், இந்தோனேசியா உள்ளிட்ட 14 நாடுகள் இந்தத் தீர்மானம் மீதான வாக்கெடுப்பில் கலந்துகொள்ளவில்லை. சீனா, பாகிஸ்தான், ரஷ்யா உள்ளிட்ட நாடுகள் இலங்கைக்கு ஆதரவாக வாக்களித்தன.

இந்த தீர்மானம் ஐ.நா. மனித உரிமைகள் மன்றத்தில் நிறைவேற்றப்படுவது இலங்கை அரசுக்கு ஒருவித சர்வதேச அழுத்தத்தை கொடுக்கும் முயற்சியாக பார்க்கப்படுகிறது. அதே வேளை, இதை அப்படியே செயல்படுத்த வேண்டிய கட்டாயம் அந்நாட்டுக்கு இல்லை.

இலங்கைக்கு எதிரான இத்தீர்மானம் உடனடியாக தமிழ் மக்களுக்கு பலன் அளிக்குமா என்பது குறித்தும் போர்க் காலத்தில் நடந்த மனித உரிமை மீறல்களுக்கு இலங்கை அரசைப் பொறுப்பேற்க வைக்குமா என்பது குறித்தும் கலவையான கருத்துகளே நிலவுகின்றன.

**நன்றி: பி.பி.சி தமிழ்**




அனைவருக்கும் தமிழ் சித்திரை புத்தாண்டு வாழ்த்துக்கள்

# பேசும் படம்



வெற்றிமணி ஆசிரியர் கண்களுக்குள் பட்ட காட்சி படமானபோது! அதனை முகப்புத்தகத்தில் பதிந்து படத்தின் உணர்வை வரிகளாக்கும் படி கேட்டிருந்தார். அதனை வெற்றிமணியின் நடுபக்கம் என்பக்கம் என்பதாலோ என்னையே நடுவராகுங்கள் என்றார். 7 பெயர்களை தெரியுங்கள் என்றார். எப்படியும் சம்மதிக்க வைப்பார் என்பதனால் நானே சம்மதித்தேன்.

கவிதைகள் மலர்களைப் போல. ரோஜாவின் அழகும், தாழம்பூவின் வாசமும் வெவ்வேறானவை. ஆனால் அனைத்துமே தனித்துவமானவை. இந்தப் போட்டிக்கு வந்திருந்த அத்தனை கவிதைகளுமே அழகும் வாசனையும் கலந்து கட்டிய கவிதைகள். ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு மலர் பிடிக்கும். அதற்காக மற்ற மலர்கள் அழகில்லை என்பது அர்த்தமல்ல. பறிக்கப்படவில்லை என்பதற்காய் மலர் அழகில்லை என்று பொருளல்ல. பூப்பதே பூவின் வெற்றி, பறிக்கப்படுவதல்ல. எனவே தொடர்ந்து எழுதுங்கள். தொடுவானம் தொட ஓடட்டும் உங்கள் கற்பனையின் கால்கள். அடியாழம் தொட நீந்தட்டும் உங்கள் சிந்தனைகளின் வேகம். அனைவருக்கும் வாழ்த்துகள்.

என்னைக் கவர்ந்த 7 கவிதைகள் இதோ;

அன்புடன் உங்கள்
நடுவே சேவியர்
(தமிழ்நாடு)



நீ வரவேமாட்டாய் என்பதை
மறந்துவிட்டேன்
இப்போது காத்திருப்பது
சுகமாக இருக்கிறது!

**- யாழ் அகத்தியன்**

மனிதனின் உள் இருக்கையால்
உவத்திரம் இன்றி துய்க்க
முடிகிறது
தூய்மையான பொழுதை.

**-சின்னத்துரை இரவீந்திரன்.**

உன்னோடு சேர்ந்து வாழ்ந்து
நீந்திக்களித்த கரையோரம்
நினைவுகளை சுமந்தபடி
காத்திருப்பதும் ஓர் சுகமே

**-பாமினி துஷ்யந்தன்.**

நானும் என் சுற்றமும் மகிழ்ந்து பாடிய
அழகிய பூஞ்சோலை
அடர்பனிக்கு ஏனிந்தப்
பொறாமை
கருக்கிவிட்டு இருள்
கவிழ்த்ததை முறையிட்டு
கதிரவன் வருகைக்காய்
ஒற்றைக்காலில் தவம்

**-கரிணி**

மனிதர்களே இல்லா
வெற்று வெளியில்
மனிதத்தை தேடும்
ஒற்றை குருவி நான்....

**-மதினி உதயகுமார்**

இருண்ட கருமேகங்களின்– நடுவே
துகிலுரிந்த மரம்போல நானும்
தனிமையினால் ஜோடியின்றி
தவிக்கிறேன்....

**-கி.த.குகதாசன்**

காணமலாக்கப்பட்ட மனிதனுக்கே
மனித உரிமை சபையிலும்
ஐநா சபையிலும் விடையில்லை
எனும் போது என்னவனுக்கு மட்டும்?

**-தயாநிதி தம்பையா**

# திருகோணமலை தேன்கயிலை மலையில் 108 சிவலிங்கங்கள்

சிவராத்திரி தினத்தில் 11.03.2021 திருகோணமலை தென்கயிலை ஆதீனத்தில் மலை முழுவதும் நிறுவப்பட்ட 108 சிவலிங்கங்கள், மகா சிவராத்திரி தினத்தில் திருகோணமலை தென்கயிலை ஆதீனத்தில் 108 சிவலிங்கங்கள் மலை முழுவதும் நிறுவப்பட்டுள்ளது.

கடந்த 2020 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 05 ஆம் திகதி சிவலிங்கங்கள் நிறுவப்படுவது தொடர்பிலான அறிவிப்பு வெளியிடப்பட்டிருந்து.

இதன் தொடர்ச்சியாக கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் தென்கயிலை ஆதீனம் சிவன் மலையில் மூன்று லிங்கங்கள் உயிர்ச்சக்தியூட்டப்பட்டு அமர்த்தப்பட்டன.



புலம்பெயர் தமிழர்களின் பங்களிப்புடன் அவர் அவர்களின் பெயர்களில் இந்த சிவலிங்கங்கள் நிறுவப்பட்டன.

இந்நிலையில், மகா சிவராத்திரி தினத்தில் தென்கயிலை ஆதீனத்தில் 108 சிவலிங்கங்கள் மலை முழுவதும் நிறுவப்பட்டுள்ளமை சிறப்பம்சமாகும். சிவலிங்கங்களுக்கு அடியில் பங்களித்தவர்கள் பெயரைப் பொறிக்காமல். ஒரே கல்லில் தனியாக அவர்களது பெயரைப் பொறித்திருக்கலாம். பொதுவாகப் பார்ப்பவர்கள் எதிர்காலத்தில் 108 சிவலிங்கத்தின் பெயர்கள் அவை என எண்ணக்கூடும அல்லவா?.





Tel:0234 23 990 32 | Fax: 0234 7945 7171 | Mob:No:0179 1484 892 | e.mail:siva@hotmail.de

அனைவருக்கும் தமிழ் சித்திரை புத்தாண்டு வாழ்த்துக்கள்

# இரவோடு இரவாக வடக்குக் காணி ஆவணங்கள் இடமாற்றம்

## தமிழ் நிலங்களை அபகரிக்கும் கபடத்திட்டம்

### பொ. ஐங்கரநேசன்- இலங்கை




யாழ்ப்பாண மாவட்டச் செயலக வளாகத்துக்குள் இயங்கி வரும் காணிச் சீர்திருத்த ஆணைக் குழுவின் வடமாகாணத்துக்கான அலுவலகத்தில் இருந்து காணி ஆவணங்கள் அநுராதபுர அலுவலகத்துக்கு இடம் மாற்றப்பட்டுள்ளன.

இவ்வாறு இடம் மாற்றப்படுவதற்குப் பலரும் எதிர்ப்பை வெளியிட்ட போதும், இரவோடு இரவாக யாழ் மாவட்டம் தவிர்ந்த ஏனைய நான்கு மாவட்டங்களினதும் ஆவணங்கள் எடுத்துச் செல்லப்பட்டுள்ளன. தமிழ் நிலங்களை அபகரித்து தென் இலங்கை வாசிகளுக்குக் கையளிக்கும் அரசாங்கத்தின் கபடத் திட்டமே இதுவாகும் என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன் தனது கண்டனத்தைத் தெரிவித்துள்ளார்.

வடக்கின் காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவின் ஆவணங்கள் அநுராதபுரத்துக்கு இடம் மாற்றப்பட்டமை தொடர்பாக பொ. ஐங்கரநேசன் [15.03.2021] வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தனது கண்டனங்களைத் தெரிவித்துள்ளார்.



அந்த அறிக்கையில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

காணிச் சீர்திருத்த ஆணைக் குழுவின் வசமுள்ள காணிகள் அரச காணிகள் என்றாலும் இவை மக்களின் உறுதிக் காணிகள் ஆகும். இவை 1972 ஆம் ஆண்டு அப்போதைய பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா அம்மையார் அவர்களால் 50 ஏக்கர்கள் காணிக்கு மேல் ஒருவர் உரிமையாளராக இருக்க முடியாது என்று கொண்டுவரப்பட்ட நில உச்ச வரம்புச் சட்டத்தின் காரணமாக அரசாங்கத்திடம் ஒப்படைக்கப்பட்ட காணிகள்.

வடக்கில் எமது மக்களால் கையளிக்கப்பட்ட ஏறத்தாழ 12,000 ஏக்கர் பரப்புடைய காணிகளின் ஆவணங்களே இப்போது அநுராதபுரத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளன. காணிச்சீர்திருத்த ஆணைக்குழுவிடமுள்ள வடக்கு மாகாணக் காணிகள் பற்றிய விபரங்கள் எவையும் வடக்கு மாகாண சபையிடம் இல்லை. வடமாகாணக் காணித் திணைக்களம், வடமாகாண ஆளுநர் அலுவலகம் இவை பற்றிய விபரங்களைக் கோரியபோதும் காணிச் சீர்திருத்த ஆணைக் குழு இவற்றைத் தெரியப்படுத்த மறுத்ததோடு, மிகவும் இரகசியமாகக் காணிகளைச் சிங்கள மக்களுக்கு நீண்டகாலக் குத்தகைக்கு வழங்கும் செயற்பாடுகளிலும் ஈடுபட்டுள்ளது. இவ்வாறு, பளையில் சிங்கள மக்களுக்குக் காணிகள் ஒதுக்கப்பட்டிருப்பது அண்மையில் வெளிச்சத்துக்கு வந்துள்ளது.

ஒரு இலட்சம் காணித் துண்டுகளைச் சுயதொழில் முனைவோருக்குப் பகிர்ந்தளிக்கும் திட்டத்தை அரசாங்கம் ஆரம்பித்திருக்கும் நிலையிலேயே காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவினால் வடக்கின் ஆவணங்கள் அநுராதபுரத்துக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளன. இது, வடக்கில் சிங்கள மக்களுக்குக் காணிகளை வழங்கும் கரவான திட்டத்தின் முதற்படியேயன்றி வேறல்ல் இது, தமிழ் மக்களை அவர்களது பாரம்பரிய தாயகத்திலேயே சிறுபான்மையினராக்கும் பொருட்டு அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டுவரும் பல்வேறு நிகழ்ச்சிநிரலின் ஓரங்கம் ஆகும்.

இக்காணிகள் வடக்கைப் பூர்வீகமாகக் கொண்டுள்ளவர்களுக்கு மாத்திரமே பகிர்ந்தளிக்கப்படுவதைத் தமிழ் மக்களின் பாராளுமன்றப் பிரதிநிதிகள் எப்பாடுபட்டேனும் உறுதிசெய்ய வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

**பிந்திய செய்தி;**

**வடமாகாண காணி ஆவணங்கள் மீண்டும் யாழ். வந்தது**

யாழ்ப்பாணத்திலிருந்து அனுராதபுரம் கொண்டு செல்லப்பட்ட காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் ஆவணங்கள் மீண்டும் யாழ். மாவட்ட செயலகத்துக்கு கொண்டுவரப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட அரச அதிபர் க.மகேசன் தெரிவித்தார்.




கனகசபேசன் அகிலன்
(இங்கிலாந்து)

# பெட்டிப்பிளேன்



பல வருடங்களுக்கு முன் எழுத நினைத்த விடயம், 'இப்ப என்ன அவசரம்' என்று தள்ளிப்போட்டு விட்டேன்...சில வருடங்களுக்கு முன் கிட்டத்தட்ட அதையே வேறொருவர் கவிதையாக எழுதி நான் வாசித்தபோது 'சீ, முந்திவிட்டாரே' என்று சிறிது முனகிக்கொண்டேன், 'அவரும் யோசித்திருக்கின்றாரே' என்று மகிழ்ச்சியும் கூட! அதை எழுதியவர் மறைந்த பிரபல பாடலாசிரியர் நா. முத்துக்குமார் அவர்கள். ஒரு வித்தியாசம், அவருக்கு ஐந்தாம் வகுப்பில் நடந்தது எனக்கு முதலாம் வகுப்பிலேயே நடந்தது, உங்களுக்கும் அப்படியொரு அனுபவம் இருக்கலாம்...'இதெல்லாம் எழுதி யாருக்கு வெளிச்சம்?' என்று எண்ணி நீங்களும் கடந்து சென்றிருக்கலாம்...

முன்பள்ளியில் என் காலம் முடிவடைந்து ஆரம்ப பாடசாலைக்குச் செல்கின்றேன், எனது வீட்டிலிருந்து கிட்டத்தட்ட பதினைந்து நிமிட நடை, அன்று வரை வீட்டிலிருந்து ஐந்நூறு மீட்டருக்குமேல் தனியாக எங்கும் சென்றதில்லை. முன்பள்ளி வீட்டிலிருந்து மூன்று நிமிடம் கூட இருக்காது! முன்பள்ளியென்பதை விட 'குழந்தைகளுக்கான பகல் விடுதி (creche)' என்று கூறுவதே மிகவும் பொருத்தம். ஒரு காலத்தில் இலங்கையில் இப்படி இரு விடுதிகளே இருந்தன என்று அறிந்தேன், இந்த பாலர் பகல் விடுதி எமது கிராமத்தினருக்கும் அயலில் உள்ளவர்க்கும் அன்றும் இன்றும் மிகவும் பயனுள்ளதாக செயற்படுகின்றது, இதை நிறுவியவரின் முற்போக்கு சிந்தனைக்கு ஒரு எடுத்துக்காட்டு! [இரு பாடசாலைகளின் புகைப்படங்களும் இணைக்கப்பட்டுள்ளன].

முதலாம் வகுப்பு, ஆரம்ப பாடசாலையில் இணைந்து சில வாரங்களே சென்றிருக்கும், எனக்கு ஒரே ஒரு மாணவனை மட்டுமே தெரியும், அவன் மூலமாக, இன்னுமொரு நண்பனும் அறிமுகமானான், மூன்று பேரும் அருகருகே வகுப்பில்...ஆசிரியர் வழமைபோல் வகுப்பிற்கு வருகின்றார், 'வணக்கம் டீச்சர்...' சொல்லிவிட்டு அமர்கின்றோம்... டீச்சர் ஆரம்பிக்கின்றார் 'பிள்ளையள், இன்றைக்கு நீங்களெல்லோரும் வளர்ந்தாப்பிறகு என்னவாய் வர விருப்பமென்று சொல்ல வேண்டும் என்று...எல்லோரும் 'டொக்டர், என்ஜினியர் என்று ஏதோ எல்லாம் சொன்னார்கள், எனக்கு எல்லாம் பச்சையாகவே தெரிந்தது, வகுப்பின் திறந்த கதவினூடே தெரியும் விளையாட்டு மைதானத்தின் பசுமை நிறம்!' விளையாடவென்று பள்ளிக்கூடம் வந்தால் வினையாக முடிஞ்சுட்டுதே...' என்று எண்ணியபடி, அருகில் இருந்த நண்பனைத் தட்டி, இரகசியமாக 'என்னடா சொல்ல?' என்று கேட்டேன். அவனோ அவசரத்தில் 'டீச்சர் பார்க்கின்றா...பைலட் (pilot) என்று சொல்லு' என்றான். எனக்கோ 'பைலட்' என்றால் என்னவென்றே தெரியாது, டீச்சர் விளக்கம் கேட்டால் என்ன சொல்வது? அவனைத் திரும்பவும் சிறிதாகச் சுரண்டி 'டேய், அப்படியெண்டா என்னடா ?' என்று அதட்டினேன். அவன் பதற்றத்துடன் 'எனக்கும் தெரியாது, இப்போதைக்கு சும்மா சொல்லடா...' என்று கோபப்பட்டான்.

எனது நல்ல காலம் பின் வரிசையிலிருந்த என்னிடம் வர முன்பே டீச்சருக்கு எல்லோரது வருங்காலத் தொழில்களையும் கேட்டு அலுத்து விட்டதோ அல்லது 'பின் வாங்கு முன்னேறாது' என்று கைவிட்டு விட்டாரோ தெரியவில்லை...அப்போது தப்பிவிட்டேன் ஆனால் நான் அந்த நிகழ்விலிருந்து முழுதாக மீழவில்லை, வீட்டுக்குச் சென்றவுடன் 'பைலட்' என்றால் என்னவென்று அறிந்து கொண்டேன். அன்றிலிருந்து ஆகாயத்தில் சத்தம் கேட்கும் போதெல்லாம் அண்ணாந்து பார்ப்பேன், அந்த நேரத்தில் அடிக்கடி தெரிவது 'பெட்டிப்பிளேன்', கீழிருந்து பார்த்தால் அதன் பின்பகுதி சதுரப்பெட்டி போல் இருக்கும்... 'இந்த உயரத்தில்லா நான் பறப்பது? 'சீ, உதெல்லாம் சரிவராது,எட்டாப் பழம் புளிக்கும்' என்று 'பைலட்' வேலைக்கு முழுக்குப் போட்டு விட்டேன். எதுவுமே அறியாத,ஏழு வயது மாணவர்களிடம் பல வருடங்களுக்குப் பின் நடக்கும் விடயத்தைப் பற்றி கேட்டால் என்ன சொல்லுவார்கள்? பல ஆசிரியர்கள், அறிந்தோ அறியாமலோ, இந்தக் கேள்வியை இன்னமும் கேட்டுக் கொண்டுதான் இருக்கின்றார்கள். இது ஒரு பெரிய பிழையான கேள்வியல்ல, இருந்தாலும் அந்த வயதில் 'வெறுமையான மைதானம்' போல் இருக்கும் மாணவர்களின் மூளைக்கு இப்படியான கேள்விகளால் என்ன பயன் என்று எண்ணத் தோன்றுகின்றது. வெளியுலகத்தை பெரிதும் அறியாத, விளையாட்டேதம் தொழில் என்று பொழுதைக் கழிக்கும் மாணவர்கள் எதிர்காலத்தைப் பற்றி எப்படிச் சிந்திப்பார்கள்? ஆசிரியர்கள் இப்படியான தகவல்களை சேகரித்து அதை மாணவர்களுக்கு பிரயோசனமாகப் பயன்படுத்தினால் பரவாயில்லை ஆனால் அதிகமான நேரங்களில் மேலதிகமாக ஏதும் நடப்பதில்லை...

இக்கட்டான கேள்விகளை கேட்க முன்பு மாணவர்களுக்கு முழுமையான விளக்கத்தைக் கொடுத்துவிட்டு பின்பு கேள்விகளைக் கேட்க வேண்டும். இல்லையெனில் 'பிளேன் விழுந்து விடும்' என்று நான் நினைத்தது போல், 'டாக்டர்கள் இரத்த உறுஞ்சிகள்' 'விவசாயிகள் வெறும் மண் பூச்சிகள், வாழ்நாள் ஏழைகள்'... என்று சிலர் அறியாத வயதில் பிழையான விடயங்களை மூளையில் புகுத்தி விடக்கூடும்.ஆசிரியர்கள், மாணவர்கள் எதிர்காலத்தில் சரியான முடிவுகளை எடுப்பதற்கு தேவையான எல்லா தகவல்களையும் வழங்கி அவர்களுக்கு வரும் சந்தேகங்களைத் தீர்த்து வைத்து உறுதுணையாக இருக்க வேண்டும். உதவியற்ற கேள்விகளை கேட்டு அறியாப்பருவதில் இருக்கும் மாணவர்களின் மனதில் பயத்தை விதைத்து விடக்கூடாது.

'Teachers are the managers of the world's greatest resource; Children!'







அனைவருக்கும் தமிழ் சித்திரை புத்தாண்டு வாழ்த்துக்கள்






## எதிர்ப்பின் நடனம்

துணிவப்பிய முகத்தோடு
நான் வெளிக்கிளம்பினால்
முகப்பூச்சும் பொட்டும் இட்டுவிடுகிறாள்
அம்மா

கால்களைப் பரப்பி கம்பீரமாய்
எதிர்ப்பை உடுத்திப் புறப்பட்டால்
சேலையொன்றைப் பாசமாய் பரிசளிக்கிறார்
அப்பா

என் பேருருவில் பதுக்கிய உணர்வுகளை
பிறாண்டி எடுத்து
பேசத் தொடங்கினால்
பெண்ணாக இரேன் என்கிறான்
தம்பி

மனுசியாய் இருக்க
யாருக்கு மனுப்போட என சர்ச்சித்தால்
பிரளயத்திற்கு பிறந்தவளே உட்கார் என்கிறான்
திருப்தியற்று, கணவன்

பெருந்திசைகளில் நான் எங்கிருந்தாலும்
முலைகளையும் பெண்குறிகளையும்
முதலிற்கண்டு, எனக்கே காட்டி
இவை நீ என்கிறார்

பிரபஞ்சம் வியக்க
இவர்களை பகிரங்கமாய்
யார் நீ என்றேன்

## பிறக்கப்போகும் சிறுமி

உடல் முழுதும் இறக்கைகளோடு
முதலாம் நூற்றாண்டின் சிற்பிகள் வசிக்கும்
நகரத்திற்குள் அவள் பிரவேசித்தாள்

அவளது ஆக்கும் திறனோடு மோதி
பெருமதில்கள் உடைந்தன
ஆங்காங்கே நின்ற விருட்ச மரங்களின்
கிளைகளோடும் இலைகளோடும் அவள்
பாடினாள்
நட்சத்திரங்களை சலங்கையாக்கி
சிறுமி ஆடிக்கொண்டிருந்த பொழுதில்
சிற்பிகள் வந்தார்கள்

சிறுமியின் ஆற்றலிலும், ஆடலிலும்
வனப்பிலும் அவளை தம் பெண்தெய்வங்கள்
வீற்றிருந்த கோவில்களில்
வாஞ்சையோடு மீண்டும் சிற்பம் வடிக்கத்
தொடங்கினர்
பெரும் பாறைகளின்று பெயர்த்து
தன்னிலிருந்த துகள்களைத் தட்டியபடி

உங்கள் உளியை என்னிடம் தருவீர்களானால்
எனது ஆற்றலையும் சிந்தனையையும் நான்
தருகிறேன் என அவள் பேசத்தொடங்கினாள்.

.............................

## சில முடிவுகளை விரல்களே எடுத்துவிடுகின்றன

எனது கைகள்
உங்களுக்கானவை தான்
எனது விரல்களும் தசைகளும்
உங்களுக்கானவை தான்.

நீங்கள் என்னைப்
பெருமிதம் கொள்ள வைக்கும்போது
எனது பெருவிரலை
உங்களுக்காக உயர்த்துகிறேன்
சுண்டுவிரலை குழந்தைகள்
பிடித்து வரவும் சுட்டுவிரலை
மாணவர்களுக்காகவும்
மோதிரவிரலை தன் கைகளைக்
கொடுப்பவனுக்காகவும்
நீட்டுகிறேன்

இன்னபிற விரலும்
இப்படியாகவே எப்போது,
எச்சந்தர்ப்பத்தில்,
யாருக்கு, எந்த விரலை...
நீட்டுவது என்பதை
நானே தீர்மானிக்கிறேன்!

## அழகுதான்

வரிசையாக
நாட்டப்பட்ட மரங்கள்
நேர்க்கோட்டில்
வைக்கப்பட்ட ரோஜாக்கள்
வட்டத்திற்குள்
ஒழுங்கமைக்கப்பட்ட
செவ்வந்திகள் வேலிகளில்
படரவிட்ட கொடிப்பூக்கள்
கத்தரிக்கப்பட்ட
புற்தரைகள் நம் வசதிக்கு
நம் பார்வைக்கு என
பூங்காக்கள் தோட்டங்கள்
அழகானவை மென்மையானவை
பாதுகாப்பானவை
எனினும் இயற்கையின் உச்சம்
காடு!
ஆதிமனுசியைப் போல
காடு பேரியற்கை
காடு பெண்ணியப் பெண்
ஒரு காடு கைவசமாவது
அத்தனை சுலபமல்ல

**கவிதா லட்சுமி**
(நோர்வே)

**ஜேர்மன் வாழ் எழுத்தாளர்களுக்கு வேண்டுகோள்**

விரைவில் வெளிவரவுள்ள

**'படைப்பாளர்கள்'**

என்னும் நூலில் உங்கள் நூல் விபரம் மற்றும் ஆக்கதாரர்களின் விபரங்களையும் பதிவு செய்ய வேண்டும் என்ற முனைப்பில் ஈடுபட்டுள்ளோம்.

உங்கள் நூலாக்க விபரங்களைப் பின்வரும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு வேண்டுகின்றோம்.

குறிப்பு (ebook) ஆகவும் நூல் உருவில் வெளியிடப்படும்.
மேலதிக விபரங்களுக்கு
(germantamilwriter@outlook.com)

சு.பாக்கியநாதன்
0152 10378556
பி.எஸ்.இராஜகருணா
0176 31740702
சுப்பிரமணியம்
0176 74528044





# திடீரென மயங்கி விழுதல்

Dr.IN

பாடசாலையில் காலை வழிபாட்டு நேரம். ஆசிரியர் திருவாசகத்தில் திளைத்து தன்னை மறந்து நேரம்போவது தெரியாது பேசிக் கொண்டிருக்கையில் ஒரு மாணவி பொத்தென விழுந்துவிட்டாள்.

அதேபோல இராணுவ வீரர்கள் அணிவகுத்து நிற்கும்போது விழுவதும் உண்டு. படுக்கையிலிருந்து திடீரென எழும்போது மயங்குதல், திடீரெனத் திரும்பிப் பார்க்கையில் விழுதல், சாமிக்கு வைப்பதற்காக பூ கொய்வதற்காக கழுத்தை நிமிர்த்தியபோது திடீரென விழுதல் போன்ற பல்வேறு உதாரணங்களையும் குறிப்பிடலாம்.

## திடீர் மயக்கங்கள்

இவை எல்லாம் திடீர் மயக்கங்கள். மயங்கி விழுந்த வேகத்திலேயே மயக்கம் தெளிந்துவிடுவார்கள். இத்தகைய மயக்கம் தீவிரமான நோய்களின் அறிகுறிகள் அல்ல. பக்கவாதமோ வலிப்பு நோயோ அல்ல. மருத்துவத்தில் Black out எனச் சொல்லப்படும் இவை கணநேரம் மூளைக்கச் செல்லும் ஒட்சிசன் குறைவதால் ஏற்படுவதாகும். டடயஉம ழரவ எனப் பொதுவாகச் சொல்லுவார்கள்.

டாக்டர் எம்.கே.முருகானந்தன்
MBBS (Cey),DFM (Col),FCGP (Col)
குடும்பவைத்தியர்

'இருட்டிக் கொண்டு வந்தது', 'என்ன நடந்தது எனத் தெரியாது திடீரென விழுந்துவிட்டேன்' என எம்மவர்கள் சொல்லுவார்கள். திடீர் மயக்கம் என நாம் சொல்லலாம்.

இத் திடீர் மயக்கங்கள் பெரும்பாலும் எதிர்பாராது வரும். சிலருக்கு வியர்த்துக்கொண்டோ அல்லது வாந்தியுடன் வரலாம். சில கணங்களுக்குள் விழுந்தவர் தானே விழித்து எழுந்து விடுவார். இவர்களில் பெரும்பாலனர்கள் மற்றவர்களின் எந்த உதவியும் இன்றி தாமாகவே எழுந்து தமது அலுவலைத் தொடரக் கூடியதாக இருக்கும்.

பொதுவான சனத்தொகையில் பத்தில் நான்கு பேருக்கு இத்தகைய மயக்கம் தமது வாழ்நாளில் ஒருமுறையாவது ஏற்பட்டிருக்கும் என்கிறார்கள். இவ்வாறன மயக்கம் ஒருவருக்கு 40 வயதிற்கு முற்பட்ட காலத்திலேயே முதன்முறையாக வரும். 40 வயதிற்கு பின்னர்தான் முதன் முறையாக ஒருவருக்கு இப் பிரச்சனை ஏற்படுகிறது எனில் அது சற்று தீவிரமான நோயின் வெளிப்பாடாக இருக்கலாம். பெரும்பாலும் பதின்ம வயதுகளிலேயே முதல் முதலாக வருகிறது. பையன்களை விட பெண் பிள்ளைகளில் வருவது அதிகம்.



## காரணங்கள் எவை

பெரும்பாலன இத்தகைய மயங்கங்கள் நரம்பு மண்டலம் சம்பந்தப்பட்டவையே (neurally mediated syncope-NMS) கடுமையான வலி, மன அழுத்தம், பயம், தீவிர உடற் பயிற்சியின் போன்றவற்றின் போது நிகழ்கின்றன. கடுமையான வாந்தியின் போதும் வருவதுண்டு.

பொதுவாக முகம் வெளிறுவதுடன் வியர்வையும் சேர்ந்து வரலாம். பெரும்பாலவனர்களுக்கு அந்நேரத்திலும் கண்கள் திறந்து இருக்கும். மருத்துவ மாணவன் மயங்கி விழுந்ததற்குக் காரணம் முதன் முறையாக இரத்தம் வெளியேறுவதைக் கண்ட அதிர்ச்சியே ஆகும். அதே மாணவன் பின்னர் திறமையான சத்திரசிகிச்சை நிபுணராக புகழ் பெற்றது ஆச்சரியமான விடயமல்ல. மற்றொரு முக்கிய காரணம் திடீரென ஒருவரின் இரத்த அழுத்தம் குறைவதால் ஆகும். படுக்கை நிலையில் இருந்து எழுந்திருக்கும்போது அல்லது உட்கார்ந்த நிலையிலிருந்து எழுந்து நிற்கும் போது திடீரென ஒருவரது இரத்த அழுத்தம் குறைவதுண்டு.

இதை நிலை சார்ந்த குறை இரத்த அழுத்தம் (Postural hypotension) என்பர். நீண்ட நேரம் ஒரே இடத்தில் கால்களை அசைக்காது நிற்கும் போதும் இரத்த ஓட்டம் குறைவடைவதால் அவ்வாறு இரத்த அழுத்தம் குறையக் கூடும். பாடசாலை மாணவி விழுந்தது அவ்வாறே ஆகும்.

வயதானவர்களில் இவ்வாறு நிலை சார்ந்த குறை இரத்த அழுத்தம் ஏற்படுவதற்கு பல மருந்துகள் காரணமாக இருப்பதுண்டு.

உயர் இரத்த அழுத்தத்தைக் குறைக்க பயன்படுத்தப்படும் Prazosin, HCT, Atenolol, propranolol போன்றவை முக்கியமானவை. அதே போல மனச் சோர்விற்கு உபயோகிக்கும் doxepin, imipramine, Amitriptylineபோன்றவையும். ஆண்குறி விறைப்படைதலை ஊக்குவிக்கும் Sildenafil , tadalafil மருந்துகளும் நிலை சார்ந்த குறை இரத்த அழுத்தத்தை ஏற்படுத்துவதால் சில தருணங்களில் திடீர் மயக்கத்தைக் கொண்டுவருவதுண்டு.

மலத்தை கடுமையாக முக்கி வெளியேற்றும் போது மூச்சை அடக்குவதால் இவ்வாறான மயக்கம் நேரலாம். கடுமையான காய்ச்சல், கடுமையான வயிற்றோட்டம் போன்ற நோய்களால் உடலின் நீர்த்தன்மை குறைவதாலும் மயக்கம் ஏற்படுவதைக் காண்கிறோம். குக்கல் போன்ற கடுமையான இருமலின் போது, மூச்சு விடமுடியாது இரத்தத்தில் ஒட்சிசன் அளவு குறைவதாலும் ஏற்படுவதுண்டு. கடுமையான வரட்சியால் வியர்வை அதிகம் வெளியேறுவதால் உடலிலுள்ள நீரின் தன்மை குறையும்போதும் இந்நிலை ஏற்படலாம்.

## தீவிரமான வேறு நோய்கள்

சற்று தீவிரமான வேறு நோய்களாலும் இவ்வாறான மயக்கங்கள் ஏற்படலாம். முக்கியமானது வலிப்பு நோயாகும். இதன்போது பொதுவாக மயக்கம் மட்டுமின்றி கை கால்களை இழுப்பதும் நடக்கும். ஆனால் அவ்வாறான இழுப்பு இல்லாத வலிப்புகளும் உண்டு என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.



திடீரென இரத்தத்தில் சீனியின் அளவு குறையும்போதும் மயக்கம்

26 ஆம் பக்கம் பார்க்க...



# யேர்மனியில் தேர்க்காலம் ௨௦௨௧



**வூப்பெற்றால் ஸ்ரீ நவதுர்க்கா அம்பாள் ஆலயம்**
Tel: 0202 479 60 17
கொடி : 07.5.2021 - தேர்: 15.05.2021
Hünefeld Str 63b
42282 Wuppertal

**யுலிச்சன் ஸ்ரீ நவசக்தி விநாயகர் ஆலயம்**
Tel: 02164 70 20 944
கொடி: 29.05.2021 - தேர்: 06.06.2021
Hoch Str 10 b
41363 Jüchen

**சுட்காட் ஸ்ரீசித்திவிநாயர் கோவில்**
Tel:0176 434 424 39
கொடி: 12.06.2021 - தேர்: 20.06.2021
Lehmfeld Str 18
70374 Suttgart

**கற்றிங்கன் ஸ்ரீ வரசித்திவிநாயகர் ஆலயம்**
Tel: 02324 27061
கொடி: 12.06 2021 - தேர்: 20.06.2021
Gottwald Str 23
45525 Hattingen.

**கொமஸ்பாக் குறிஞ்சிக்குமரன் ஆலயம்**
Tel: 02261 913 133
கொடி: 17.06.2021 - தேர்: 25.06.2021
Industrie Str 7
51643 Gummersbach

**பிறாங்போட் நாகபூசணிஅம்பாள் ஆலயம்**
Tel: 069 979 45 618
கொடி: 13.06.2021 - தேர்: 26.06.2021
Adelbert Str 61-63
60486 Frankfurt/M

**கிறிவீல்ட் ஸ்ரீ நாகபூசணி அம்பாள் ஆலயம்**
Tel: 02151 565 00 45
கொடி: 19.06.2021 - தேர்: 27.06.2021
Girmesgath 95, 47803 Krefeld

**ஹம் ஸ்ரீ காமாட்சிஅம்பாள் ஆலயம்**
Tel: 02388 302 223
கொடி: 28.06.2021 - தேர்: 11.07.2021
Siegenbeck Str 4-5, 59071 Hamm

**எசன் ஸ்ரீகதிர்வேலாயுதசுவாமி ஆலயம்**
Tel: 0201 806 74 33
அலங்கார உற்சவம்: 03.07.2021- தேர்: 11.07.2021
2021Kloster Str 49 a, 45149 Essen

**டோட்முண்ட் ஸ்ரீ சாந்தநாயகி சமேத சந்திரமௌலீஸ்வரர் ஆலயம்**
Tel: 0231 72515165
கொடி: 10.07.2021 - தேர்:18.7.2021
Klefer Str 24, 44225 Dortmund

**ஹம் திருநல்லூர் ஆறுமுக வேல்லழகர் ஆலயம்**
Tel: 02381 291 03
கொடி: 10.07.2021 - தேர்: 18.07.2021
Roon Str 2 a
59065 Hamm

**சுட்காட் சித்திவிநாயகர் அலயம்.**
Tel: 0711 470 30 47
கொடி: 16.07.2021 தேர்: 25.07.2021
Waiblnger Str 30
70372 Suttgart

**சுவெற்றா கனக துர்க்கா அம்பாள்ஆலயம்**
Tel: 02304 16721
கொடி: 17.07.2021 - தேர்: 25.07.2021
Roberte koch Str 5 a
58239 Schwerte

**கிஸ்கெம்ரெக் கனகதுர்க்கஅம்பாள் ஆலயம்**
Tel: 07021 807 43 99
அலங்காரத் திருவிழா: 24,.07.2021 - தேர்: 01..08.2021
Alleen Str 18-20
73230 Kirchheim U. Teck.

**ஹம் சித்திவிநாயகர் அலயம்**
Tel: 02381 162 686
கொடி: 24.07.2021 - தேர்:01.08.2021
Ferdinand poggel Str25
59065 Hamm

**Pforzheim நாகபூசணி அம்மன் ஆலயம்**
Tel: 0176 813 579 10
அலங்காரத் திருவிழா: 24.07.2021 - தேர்: 01.08.2021
Turn Str 8a
75173 Pforzheim

**கனோவர் முத்துமாரி அம்பாள் அலயம்**
Tel: 0511 471 149
கொடி: 13.08.2021 - தேர்: 21.08.2021
Carl-Buderus Str 3 a
30455 Hannover

**பேர்லின் மயூரபதி முருகன் அலயம்**
Tel: 030 694 6900
கொடி: 13.08.2021 - தேர்:05.09.2021
Blaschko Alle 48
12355 Berlin.

**கவுஸ்கொம் முல்கைம் முருகன் ஆலயம்.**
Tel: 0152 537 924 93
அலங்காரத் திருவிழா: 27.08.2021 - தேர் 05.09.2021
Hauskam Str 58
45476 Muelheim/Ruhr

**ஹம் வெங்கடேஸ்வரப்பெருமாள் கோவில்**
Tel: 02381 42 66 420
அலங்கார உற்சவம்: 02.09.2021 - தேர்: 12.09.2021
Nassauer Str 20
59065 Hamm

தொகுப்பு: ஆன்மிகத்தென்றல்
த.புவனேந்திரன் (யேர்மனி)






அனைவருக்கும் தமிழ் சித்திரை புத்தாண்டு வாழ்த்துக்கள்




ஆனந்தராணி பாலேந்திரா (UK)

# "நட்சத்திரவாசி" 1977- 1978

கடந்த இதழில் நான் யாழ்ப்பாணத்தில் நிரந்தரமாக வசிக்க வேண்டியேற்பட்ட காரணத்தையும் 'நட்சத்திரவாசி' நாடகப் பிரதி எனக்கு எவ்வாறு கிடைத்தது என்பது பற்றியும் எழுதியிருந்தேன்.

'நட்சத்திரவாசி' நாடகத்தில் வரும் வித்யா சில முரண்பாடுகள் காரணமாக இளம் வயதில் வீட்டைவிட்டு வெளியேறியவர். திருமணமாகாமல் தனித்து வாழ்கின்ற, வேலை பார்க்கின்ற ஒரு சுதந்திரமான பெண். அவர் தன் வாழ்க்கையில் சந்திக்கின்ற மனிதர்கள், அவர் மீதான சமூகத்தின் பார்வை என இந்நாடகத்தின் கதை நகர்கிறது. நடிப்பதற்கு சிக்கலான பாத்திரம். பிரதியை மீண்டும் மீண்டும் வாசித்து பாத்திரத்தின் தன்மையை உள்வாங்கிக் கொண்டேன்.

இந்நாடகத்தின் ஒத்திகைகள் யாழ்ப்பாணத்திலேயே நடைபெற்றன. 1977 இனக்கலவரத்தை அடுத்து பல்கலைக்கழகங்கள் மூடப்பட்டதால் இந்நாடகத்தில் நடித்த கட்டுபெத்தை வளாக மாணவர்கள் எல்லோரும் யாழ்ப்பாணத்தில் ஒத்திகைகளுக்கு வரக்கூடியதாக இருந்தது. நான் மட்டுமே பல்கலைக்கழகம் சாராத ஒருவர். பாலேந்திராவின் நெறியாள்கையில் ஒத்திகைகள் மும்முரமாக நடைபெற்றன. சில நாட்களில் நாள் முழுவதும் ஒத்திகைகள் செய்தோம். நீண்ட ஒத்திகைகளைத் தொடர்ந்து 'நட்சத்திரவாசி' நாடகம் முதல் முதலாக 08-01-1978 அன்று யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் மேடையேறியது.

திரை விலகும்; போது ஒரு பெண் பாடும் குரல் கேட்கும். ஒரு ஆயிரங் கால் மண்டபத்தில் இருந்து இனிய குரலில் பாட ஆரம்பித்து பின்னர் கண்ணாடி உடைந்து சிதறும் ஒலியோடு குரல் உடைந்து கரகரப்பாக மாறி இசை ஒலிக்கும். மங்கிய ஒளியில் வித்யா [நான்] மேடையில் சரிந்து விழுந்த நிலையில் மேடையின் நடுப்பகுதியில் பிரமாண்டமான லிங்கம் ஒன்று கிட்டத்தட்ட கூரையைத் தொடுவதுபோல் அமைக்கப்பட்டிருந்தது. அதனைச் சுற்றி அமர்ந்திருந்த கறுத்த உடை அணிந்த பத்து கோடி நடிகர்களும் கொலை! கொலை! என பல்வேறு தொனிகளில் சத்தமிட்டபடி மேடை முழுவதும் நகர்ந்து பெரிதாக ஆடத் தொடங்குவார்கள். சிறிது சிறிதாக ஒளி பரவ மேடையில் வித்யா கொலையுண்டு கிடப்பார். நாடகத்தின் ஆரம்பமே பார்வையாளர்களை ஒரு புதிய உலகத்துக்குள் அழைத்துச் சென்று கட்டிப்போட்டுவிட்டது என்றுதான் சொல்ல வேண்டும். பாலேந்திரா நெறியாள்கையில் மட்டுமல்ல, ஒளியமைப்பிலும் சிறந்தவர் என்பதை நாடகம் நிரூபித்தது.

இந்த நாடகத்தில் வந்த இசை ஒரு தீம் மியூசிக் போல நாடகத்தின் இடையிடையே ஒலிக்கும். ராகச்சாயல் கொண்ட சிறு ஆலாபனையும் ஸ்வரக் கோர்வைகளும் கொண்ட இந்த இசை மனதை நெருடக் கூடிய வகையில் அமைந்திருந்தது. பிரபல இசையமைப்பாளர் இசைவாணர் யாழ். எம். கண்ணன் அவர்கள் இசையமைத்திருந்தார். அவர் முதன்முதலாக நவீன நாடகம் ஒன்றிற்கு இசையமைத்திருந்தது 'நட்சத்திரவாசி' நாடகத்திற்குத்தான். இதன் பின்னர் பாலேந்திரா நெறிப்படுத்திய 'யுகதர்மம்', 'முகமில்லாத மனிதர்கள்', 'துக்ளக்', 'நெட்டை மரங்கள்' போன்ற நாடகங்களுக்கும் கண்ணன் அவர்கள் இசையமைத்திருந்தார்.

பாலேந்திரா கூறிய 'நட்சத்திரவாசி' நாடகத்தின் கதையை நன்கு உள்வாங்கி மிக அருமையாக அந்த இசையமைப்பைச் செய்திருந்தார். எனக்குப் பல்வேறு உணர்ச்சி மாற்றங்களுடன் நன்றாக நடிப்பதற்கு இந்த இசை பெரிதும் உதவியது என்று சொல்லவேண்டும். குறிப்பாக வித்யா தனது இளவயது கதையைச் சொல்லும்போது பெரிய பந்தியாக அமைந்த வசனங்களுக்கு பின்னணியில் ஒலித்த இசை வலுவூட்டியது. நிர்மலா இந்த இசைக்கு குரல் கொடுத்திருந்தார்.

பிரமாண்டமான லிங்கத்துடனான மேடையமைப்பை அப்போது கட்டுப்பெத்தை பல்கலைக்கழக கட்டடக்கலை மாணவராக இருந்த குணசிங்கம் செய்திருந்தார். இவர் பின்னர் பாலேந்திரா நெறியாள்கை செய்த 'கண்ணாடி வார்ப்புகள்', 'ஒரு பாலை வீடு', 'அரையும் குறையும்' போன்ற நாடகங்களுக்கு மேடையமைப்பு செய்ததுடன் என்னோடு 'அரையும் குறையும்' [மோகன் ராகேசின் 'ஆதே ஆதுரே'] 'முகமில்லாத மனிதர்கள்' [பாதல் சர்க்காரின் 'ஏவம் இந்திரஜித்'] ஆகிய நாடகங்களில் நடித்துமிருந்தார். சிட்னியில் 1996இல் நடந்த எமது நாடகவிழாவினை ஒழுங்கு செய்து நடத்தியவர்களில் ஒருவர்.

'நட்சத்திரவாசி' நாடகம் யாழ்ப்பாணம், கொழும்பு, பேராதனை, திருகோணமலை ஆகிய இடங்களில் மேடையேறியது. எனது நடிப்புப் பற்றிய நல்ல கருத்துகளோடு நான் ஏற்ற பாத்திரத்தின் தன்மை பற்றிய எதிர்மறைக் கருத்துகளும் முன் வைக்கப்பட்டன. இப்போது சங்கடமான வியங்களெல்லாம் எனக்கு சகஜமாகிவிட்டது.

மேடையேற்றத்திற்கான பிரயாணங்களும் சுவாரஸ்யமாக இருந்தன. நீண்ட பயணங்களின்போது பாடிக்கொண்டு செல்வோம். இந்தக் குழுவில் நான்தான் ஒரேயொரு பெண். இளவயது முதலே எல்லோருடனும் கலகலப்பாக பழகும் சுபாவம் கொண்ட எனக்கு நான் தனித்துப் போய்விட்டேன் என்ற எண்ணம் ஒரு காலமும் வந்ததில்லை. என்னில் நம்பிக்கை வைத்து, எதிர்ப்புகளையும் மீறி எனது செயற்பாடுகளுக்கு முழு சுதந்திரம் வழங்கிய எனது பெற்றோரை நான் போற்றுகிறேன்.

இந்த மேடையேற்றங்கள் பற்றி நல்ல விமர்சனங்கள் எழுதப்பட்டு பத்திரிகைகளில் வெளிவந்தன. எனது நடிப்புப் பற்றி

> வித்தியாவாக நடித்த ஆனந்தராணி மேடைநாடகப் பயிற்சியுடன் வானொலி நாடகப் பயிற்சியுமுடையவர். நீண்ட பந்திகளாகச் சில இடங்களில் அமைந்த வசனங்களைக் கூட பார்வையாளர்களுக்கு அலுப்புத் தோன்றாதபடி தேவையான உணர்ச்சிச் சாயைகளுடனும், ஏற்ற இறக்கங்களுடனும் பேச அவரால் முடிந்தது.

என்று பேராசிரியர் சி. மௌனகுரு அவர்கள் தனது விமர்சனத்தில் எழுதியிருந்தார். இது 16.03.1978 தினகரனில் வெளியாகியிருந்தது. பேராசிரியர் கா. இந்திரபாலா போன்றவர்களும் நல்ல விமர்சனங்களை எழுதியிருந்தார்கள்.

'நட்சத்திரவாசி' கனதியான ஒரு நாடகம் என்றும் அக்காலத்தில் கூறப்பட்டது. நாடகம் பார்த்த ரசிகர்கள் சிலரின் நேரடியான விமர்சனங்களும் பத்திரிகைகளில் வந்த இவ்வாறான விமர்சனங்களும், காத்திரமான நாடகங்களில் நடிக்க வேண்டும், தமிழில் நவீன நாடகங்கள் மேலும் வளர்வதற்கு எனது பங்களிப்பை வழங்கவேண்டும் என்ற உத்வேகத்தை எனக்கு அளித்தன. எனது நாடகப் பயணமும் தொடர்ந்தது.

'நட்சத்திரவாசி' நாடகத்தின் மேடையேற்றங்களின் போது நிழற்படங்கள் எதுவும் எடுக்கப்படவில்லை. ஆனால் பத்திரிகைகளில் வந்த விமர்சனங்களைப் பத்திரமாக வைத்திருக்கிறேன்.

அடுத்த இதழில் நான் நடித்த நான்காவது நாடகமான கண்ணாடி வார்ப்புகள் நாடக அனுபவம் பற்றி எழுதவுள்ளேன்.

மிகுதி அடுத்த இதழில்...





# ஊர் நினைவுகளின் ஊர்வலம்!

இந்த தலைப்பு எனக்கு மட்டும் உரியதல்ல, பிறந்த மண்ணைப் பிரிந்து வாழும் அனைவருக்கும் ஏற்றது.எனலாம்.

வாழுகின்ற வாழ்க்கையில் ஏற்றமும், இறக்கமும் பொதுவானது என்றாலும்.

சிலருக்கு மாத்திரம் சிறப்பாக அமைந்து விடுகிறது.எப்படி?என்ற கேள்விக்கு அவரவர் முயற்சியால் நிகழ்ந்தது.என்று முடித்து விடலாம்.அது நேராகவும் இருக்கலாம், குறுக்காவும் இருக்கலாம். நமக்கு இதைப்பற்றிய ஆராய்ச்சி தேவையில்லை.என்னதான் வாழ்க்கையில் மாற்றங்கள் நிகழ்ந்திருந்தாலும் ஊரைப்பற்றிய ஏக்கங்கள் இல்லாமல் போனதில்லை.அந்த நாள் நினைவுகளைப் பகிர்ந்து கொள்ள நண்பர்களைத் தேடுகின்றோம். மனைவி, மக்கள் பேசினாலும் மணிக்கணக்கான எங்களின் பழைய ஞாபங்கள், எடுத்த ரெலிபோனை வைக்க மனமில்லாமல் நிறைவு பெறுகின்றன.

மீண்டும் அடுத்த நண்பனைத் தேடுகின்றோம்.

நம்மோடு வாழ்ந்தவர்கள் பலர் இல்லாமலே போய் சேர்ந்து விட்டார்கள்.புலத்திலும்,நிலத்திலும் தான்.இப்போதெல்லாம் அதிகமாகவே ஊரை

பொன். புத்திசிகாமணி
(யேர்மனி)

நினைக்கத்தோன்றுகிறது.வன்னியில் உள்ள முல்லைத்தீவுக்குப் பக்கத்திலுள்ள வட்டுவ வாகல் தான் எனது ஊர்.முல்லைத்தீவு ரவுணிலிருந்து 1. 1/2 மைல் தூரம்.நந்திக்கடல், எங்களூரில் தான் அழகும், வளமும் சேர்க்கிறது.

மறக்க முடியாத வரலாற்றை இறுதி யுத்தம் இங்கேதான் பதிவு செய்திருக்கிறது.செங்குருதியால் நந்திக்கடல் சிகப்பாகிப் போனது.

காலங்கள் மறக்க முடியாத களங்கம் இங்கே நிகழ்ந்து முடிந்திருக்கிறது. இதன் உண்மைகளை நந்திக்கடல் அறியும்.

றால் உற்பத்தியில் பல கோடிக்கணக்கான வருமானத்தை குறுகிய காலத்தில் பெற்றுக் கொடுக்கும் காமதேனு.இந்த நந்திக்கடல். வளம் மாத்திரமன்றி எமது ஊரைப் பாதுகாக்கும் ஒரு தாயாக இந்த நந்திக்கடல் விளங்குகிறது.64ம் ஆண்டு புயலின் போதும்,2004ம் ஆண்டு சுனாமியின் போதும் ஊருக்குள் புகுந்த கடலை உள்வாங்கி,வற்றாப்பளை மட்டும் கொண்டு சென்று வேகத்தைக்குறைத்து,சேதாரமின்றி மக்களைக் காத்து திரும்பவும் கடலிலே கலக்க வைத்தது.

இதை நம்மவர்கள் என்றுமே மறக்க மாட்டார்கள். வன்னி .இயற்கை எழில் கொஞ்சும் வளம் நிறைந்த பிரதேசம்.

ஐவகை நிலங்களில் பாலை நிலத்தைத் தவிர ஏனைய நிலவளங்கள் வன்னியிலுண்டு.

மருதம்,குறிஞ்சி,நெய்தல்,முல்லை என்கிற நால் வகை நிலங்களுக்கும் உரிய சிறப்பு இந்த மண்ணிற்கு உண்டு. கனனிகள் வழிந்தோட,அதில் கமலங்கள் அசைந்தாட,வண்டுகள் கீதம்பாட,குளு குளு என்று தென்றல் இசைமீட்க,தேனருவிகள் கீதம் பாட,பச்சைப் பசேலென புற்றரைகள் பார்ப்போர் கண்ணுக்கு விருந்தூட்ட,நெல்மணிகள் கொத்துக்கொத்தாக வருவோரை வரவேற்க,மயிலாடக் குயில் பாட என்றெல்லாம் எங்கள் மாவட்டத்தை வர்ணிக்கலாம்.நற்பலன்தரும் மரங்கள்,பழங்கள்,கிழங்குகள்,செடி கொடிகள் ,எல்லாம் இப்பிரதேசத்தை அழகு படுத்துகின்றன.

தன்னிச்சையாக காடுகளில் பூத்துக் குலுங்கி மலர்ந்து மணம்வீசும் விதம் விதமான வண்ண மலர்கள் கொள்ளை அழகு தரும்.

ஐவகை நிலம் வகுத்த தமிழன் மருதத்தில் உழவு செய்தான். உழவுத்தொழிலை பொன்னே போல் போற்றி கண்ணேபோல் காத்து வந்தான்.மன்னரும் அதனை மதித்துப் பேணினர்.குளம் தொட்டு வளம் பேணினர் .செங்கோலை நடாத்தும் கோல் ஏரடிக்கும் சிறு கோலென உணர்ந்து அதனை மங்காது காத்தனர்.வரப்புயர நீர் உயர்ந்தது.நீருயர நெல்லுயர்ந்தது.நெல்லுயர குடி உயர்ந்தது. குடி உயரக் கோனும் .உயர்ந்தான்.

நான் சின்ன வகுப்பில் பேச்சுப் போட்டியில் பேசியது.வரிக்கு வரி பேசும்போது நம்ம ஊர்வயல்களைத் தான் நினைத்துப் பார்ப்பேன்.

இங்கு வாழுகின்ற மக்கள் ஒரு வருக்கொருவர் அன்பைப் பரிமாற பின்னின்றதில்லை.நந்திக் கடலின் பக்கத்தில்,ஊர்மக்களின் நம்பிக்கைக்குரிய தெய்வமாக சப்த கன்னிமார் ஆலயம்,இன்னுமொரு பக்கம் புகழ்பெற்ற வற்றாப்பளை கண்ணகை அம்மன் கோவில்,என்று அடுக்கிக் கொண்டே போகலாம்.

மா,பலா,வாழையுடன்,காட்டுப் பழங்களான பாலை,வீரை, துவரை, முரலி போன்ற பழங்களின் சேட்டைகள் வைகாசி, ஆனிஆடி மாதங்களில்,வந்து குவியும் நினைக்கவே வாயூறும்.

ஊரைப்பற்றி எவ்வளவோ எழுதலாம்.அதற்கு வெற்றிமணி ஆசிரியரும் சம்மதிக்க வேணும். அதனால் மனமின்றி முடிக்கிறேன். [இது இணையத்தில் வரும் பத்திரிகை அல்ல அச்சில் வருவதால் சிக்கனம் கருதி சிவகுமாரன் சில கட்டுப்பாடுகளை விதிக்கின்றார்.]

“ஊரை நினைக்கையிலே ஓராயிரம் கவிதை சொல்வேன். ஒவ்வொரு சொல்லினிலும். என் உயிர் மூச்சு நிறைந்திருக்கும்”.





## எத்தனை கோடி இன்பம் வைத்தாய் 04

கலாசூரி
திவ்யா சுஜேன் (இலங்கை)

# அபிநயஷேத்ராவின் முதல் மாணவி ஆரணி

பெண்ணின் மொழியை கண்ணின் மொழியில் காணும் மன்னவன் விண்ணவன் ஆவது போல், உதட்டுக்குள் ஒட்டிக்கொள்ளும் எண்ணங்களை நிஜ வண்ணங்களாக்கி நிழலாய் , நினைவாய் தொடர செய்யும் ஒளிபோல் , மேகமேடையில் நர்த்தனமாடும் பூத்த வதனத்தைக் கண்டு புவி மீதிருந்து புலனழிந்து போவது போல் , மௌனத்தில் வெள்ளமாகும் ஆனந்தத்தை போல் , மழைதுளியோடு ஊஞ்சலாடும் காற்றைப் போல் , பிரபஞ்ச வெளியில் உலவும் பட்டாம்பூச்சி போல் , தான் கெடும் தன்மை தாங்கி , தேகவேகம் கொன்று உணர்வை வென்று ஆத்ம ஆதாரமாய் நிறைந்த அனுபவத்தை அன்று பெற்றேன்.

சிட்டுக்குருவி மனமும், சிட்டெறும்பு பாதமும் என சுந்தரமாய் சுதந்திரமாய் சுற்றித் திரியும் சின்ன வயது குறும்பையெல்லாம் கரும்பாக்கி வெல்லப்பாகு வெள்ளமெனப் பாய்ந்தாடிக்கொண்டு இருந்தாள் அரங்கில் ஆரணி.வயது 12,ஆனால் அவள் அபிநயத்தில் பேரிளம்பெண். வேண்டிய படி செல்லும் உடல் , ஆதலால் அவள் நிருத்தம் நதி . குழந்தையாக , குருகுலமாக என் வீட்டில் தங்கியிருக்கும் போது கூட அறிந்திருக்கவில்லை அவள் தரப்போகும் அரங்கேற்ற ஆற்றுகைப் பரிசின் தரம். திரு விஸ்வநாதன் அவர்களின் முழவிசை நாதாமிருதமாக, திரு கலையரசன் அவர்களின் நரம்பிசைக்கு உறவாடிக்கொண்டிருந்தது திரு நந்தகுமார் அவர்களின் மிடற்றிசை. இவற்றையெல்லாம் இரு கையில் ஏந்தி,நட்டுவாங்கத்தில் லயமாக்கி இசைந்து கொண்டிருந்தேன்.

மண்டப வாயில் முதல் மங்களம் வரை நானே வடிவமைக்க வேண்டும் என்ற இள வயது ஆசை. அரிசிக்கோலத்தை அலங்கரித்தது உடுக்கு. உடுக்கின் கயிறுகளாக சங்கு. ஹரி ஹர கோலம் . அரங்கேற்ற மலரின் முகப்பில் நடராஜர் அருகே ஆடல் நங்கை ஸ்ரீராமர் நிலையில் காட்சி.

சூரிய வந்தனமாக புஷ்பாஞ்சலி, சதுஸ்ர அலாரிப்பு, ரசிகப்ரியா ஜதீஸ்வரம், தசாவதார வர்ணம் என அரங்கதிர ஆடினாள் ஆரணி. இறைவா நீ தள்ளி போனால் நான் எங்கு தான் செல்வேனோ என கண்கள் குளமாக பக்தி கொண்டு ஆடினாள். லயத்தினை வென்றது அபிநயம்.

வெடிபடு மண்டத் திடிபல
தாளம் போட-வெறும்
வெளியி லிரத்தக் கயொடு
பூதம் பாட-

என பாரதியின் ஊழிக்கூத்தாடினாள், அதில் பொய் ஆணவ ஊனம் ஒழிய வேண்டும், கள்ளம் உருக வேண்டும், வேட்கை தணிய வேண்டும் என்று அபிநய கோஷமிட்டாள். இரவியின் கொதிப்பில் இருந்து இளநிலவின் குளிர்மைக்கு மாறினாள். விழி வழியில் வழிந்தோடியது அண்ணலும் நோக்கினாள் அவளும் நோக்கினாள் , 'ஸ்ரீ ராம சந்திர' பஜன் சஞ்சாரியில் அவள் சிருங்காரம் . மேடை நடுவே இருக்கும் ஆடல் கலைஞர் , வலப்பக்கத்தில் இருக்கும் அணிசேர் கலைஞர்கள், பார்வையாளர்கள் இவர்கள் மூவரும் உணர்வு ஒன்றி கலந்து நின்றனர். இந்த முக்கோண சக்தியே நாட்டியக் கச்சேரிக்கான வெற்றியின் அடையாளம். மிஸ்ர சிவரஞ்சனி தில்லானாவில் அங்க லாவண்யத்தின் பிரதிபலிப்பாக மெய்யடவுகளை வளைந்து நெளிந்து லாவகமாக ஆடினாள்.

நாட்டிய உலகில் தற்காலத்தில் அரங்கேற்றிய உடனேயே ஆசிரியர் ஆகும் நிலை அல்லது நாட்டியத்தில் இனி கற்பதற்கு ஏதும் இல்லை என்று எண்ணும் துயரம் அல்லது முற்றாக நாட்டியத்தை கைவிடும் நிலை என மாணவர் மத்தியில் உலகளாவிய ரீதியில் பார்த்து வருகிறோம்.அரங்கேற்றம் கண்டு தசாப்தத்தை நெருங்கி கொண்டிருக்கும் அபிநயக்ஷேத்ரா மாணவி ஆரணியின் நிலை என்ன ?



அபிநயக்ஷேத்திராவின் முதல் மாணவி ஆரணி. இற்றை வரைக்கும் 400 மேடை நிகழ்வுகளிற்கும் அதிகமாக இலங்கையிலும், இந்தியாவிலும் வழங்கும் சந்தர்ப்பமும், அகில இலங்கை ரீதியான தமிழ் தின போட்டிகளிலும், நாட்டிய மயில் போட்டியிலும் வெற்றி பெறும் வாய்ப்பும், சர்வதேச சாதனை மாணவர் விருதும் , அபிநயக்ஷேத்திராவின் சிறந்த ஆற்றுகை மாணவி விருது மற்றும், சாதனைப் பெண் நட்சத்திரம் 2021 விருதும் கிடைக்கப்பெற்றுள்ளது .கணக்கியல் கற்று [ACCA] உதவி கணக்காளராக பணி புரிவதோடு, ஊடகத் துறையிலும் ,தொகுப்பாளராக கடமையாற்றுகிறார்.

வேலை பழு இருந்தாலும் நடனத்தை கற்பதை கைவிட்டு விடவில்லை இன்று வரை தொடர்ச்சியாக 15 வருடங்களாக நடனத்தைக் கற்று வருகிறேன். சவால்கள் நிறைந்த என் வாழ்வில் எந்தவிதமான மன நிலையில் இருந்தாலும் முழுமையாக விடுபட்டு மிக சிரத்தையுடன் கவனச்சிதைவில்லாமல் நடன பயிற்சிகளில் ஈடுபடுவதால் வாழ்க்கை வசந்தமாகிறது. நாட்டிய தளத்தினூடாக சமூகம் எதிர்நோக்க வேண்டிய மாற்றத்திற்கான கருத்தை தெரியப்படுத்துவது எமது குருவின் நோக்கம் , அதுவே நாட்டியத்துறையில் எனது சிறு பங்களிப்பும் ஆகும். எதிர்பார்பற்ற அன்பு, பல் துறை திறமை, கலங்கி நிற்கும் போதெல்லாம் தட்டி கொடுத்து வழிகாட்டும் ஞான ஒளி என என் குருவை பல விடயங்களில் பார்த்து அவரால் ஈர்க்கப்பட்டு கலை உலகிற்கு என்னாலான பங்களிப்புக்களை செய்ய வேண்டும் என்று ஆசைப்படுகிறேன். இதுவே என் வாழ்வில் கிடைத்த பெரும் பயனாக கருதுகிறேன். என்பது ஆரணியின் தற்போதைய கூற்று.

கல்லா பிழையும் கருதா பிழையும்..... எல்லா பிழையும் பொருத்தருள்வாய் என சிவனைப் பணிந்து கச்சேரியின் வெற்றியையும் , புகழையும் இறைவனின் பாதத்தில் சமர்ப்பித்து விடுபடுவது அபிநயக்ஷேத்திராவின் வழமை. அதனை நன்கு உணர்ந்தவளாக இன்று வரை முயற்சிக்கும், இலங்கையின் இளம் கலைஞராக பல் துறைகளில் ஜொலித்துக் கொண்டிருக்கும் ஆரணி மோகனசுந்தரம் அவர்களை கலைஞர்கள் இனிதெனப் போற்றும் வெற்றிமணி பத்திரிகையினூடாக அறிமுகம் செய்வதில் மகிழ்வுறுகிறோம்.

யாவும் படைப்பின் அருள் என்று உணர்வதும், பெற்றதெல்லாம் வரமன்றிப் பிறிதில்லை என அனைத்திற்கும் நன்றியுடையோராய் இருப்பதும், அனைத்து உயிர்களிடத்தும் அன்பு கொண்டிருப்பதும் ,அனைத்திற்கும் மூலமாய் ஆனந்தமாய் இருப்பதும் மட்டுமே ஆடலின் நோக்கமும், வாழும் முறையும். எத்தனை கோடி இன்பம் வைத்தாய் இறைவா...




இனிய
தமிழ் புத்தாண்டு
வாழ்த்துக்கள்
Sari 1
Sari1 Fashion House
4ம் ஆண்டு
நிறைவையொட்டி
அனைத்து ஆடைகளும்
10% முதல் 50% வரை
கழிவு விலைகளில் பெற்றுகொள்ளலாம்
Offer Valid from Apr 03rd to Apr 15th
Taunus Straße 49, 60329 Frankfurt
0152 19239663


PAVIZHAM MATTA LONG RICE
New Asialand
சித்திரை புத்தாண்டு
வாழ்த்துக்கள்
Weekly
SPECIAL OFFER
Mon - Sun
10KG
€10,99
14,99
5KG
€5,99
7,99
Pavizham
Pavizham
Offer Valid Both in Shop and Online
Shop Now @
www.newasialand.com
Taunus Straße 49, 60329 Frankfurt
+49 1520 1954064

# கொரோனா காலத்தில் பெண்களின் பங்களிப்பு



21 ஆம் நூற்றாண்டில், பாலின சமத்துவ சித்தாந்தங்கள், இக்கால சூழலுக்கு அவசியமான ஒன்றாகும். பல்துறையின் அச்சாணியாக, ஆண் பெண் என இரு பாலினத்தவர்களும் அறிவியக்கத்தின் உச்சத்தை பதிவு செய்து வருவது தெளிவான ஒன்றே. பாலின வேற்றுமையில், கடப்பாடுகளை நியமிப்பது, தற்காலச் சூழலுக்கு ஒவ்வாத ஒன்றாக அமைந்து வருகிறது. அதற்கான முக்கியக் காரணக்கூறு யாதெனின், பண்பட்ட நாகரீகத்தின் பரிணாம வளர்ச்சியே. பெண்ணின் பிறப்பியல்புகளுக்கான தனிச் சிறப்புகளை யாராலும் மறுக்கவியலாது. தாய்மை என்பது, பெண்மைக்கே உண்டான சிறப்பம்சம் என்றாலும் தந்தை, கணவன் போன்ற உறவுகள் தாய்மை பண்பை கொண்டிருந்தால், அது பெண்மையிடமிருந்து இரவல் வாங்கப்பட்ட குணமே என்பது யாவரும் அறிந்த ஒன்றே. பெண்ணின்றி இவ்வுலகம் இயங்குவது மிகக்கடினம். தாயாக, உடன்பிறந்த சகோதரியாக, தோழியாக, காதலியாக, மனைவியாக, மகளாக இவ்வாறு எங்கும் எதிலும் பெண் தன்னை உருவகிக்கின்றாள். கொரோனா உயிர்கொல்லி நோய் பாரினை அச்சுறுத்தி வரும் நிலையில், அதனை நிதானித்து, சாமர்த்தியமாக எதிர்கொள்ளக் கூடிய ஸ்தானங்களில் பெண்கள் முன்னிலைப் படுத்தப்பட்டு வருகின்றனர். இல்லறம், மருத்துவம், கல்வி இது போன்ற முக்கிய கூறுகளின் அடிப்படையிலும் அவர்களது பங்கு அளப்பரியது.

இயந்திரமயமான இந்த நவீன காலத்தில் இயந்திரத்திற்கு இணையாக அதிகாலை எழுந்து இரவு உறங்கும் வரை கணவருக்கும் குழந்தைகளுக்கும் தேவையானவற்றை செய்து கொடுத்து குடும்பத்தாரை மகிழ்வித்து மகிழும் மிகுந்த அர்ப்பணிப்பு மிக்க குடும்பத்தலைவிகளான இல்லத்தரசிகள் இக்கட்டான கொரோனா காலகட்டத்தில் நோய் தொற்று முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக தினமும் தான் வசிக்கும் வீட்டினை சுத்தம் செய்வதிலிருந்து நோய் எதிர்ப்பு சக்திமிக்க உணவை சமைத்து தன் குடும்பத்தினருக்கு வழங்குவதிலிருந்து ஆதி காலத்திற்கே சென்று வந்துள்ளனர் என்று சொன்னால் அது மிகையாகாது. அன்றாட வாழ்வியல் தேவைகளை முடித்த பிறகும் அன்றாடம் தங்கள் வீட்டிலிருக்கும் குழந்தைகளுக்கு கல்வி புகட்டுவதில் கொரோனா காலத்தில் தாய்மார்களின் பங்களிப்பு மிக அதிகம். சரியான நேரத்திற்கு தங்களது குழந்தைகளை நேரலை கணிணி வகுப்பு முன் அமர வைப்பதில் அவர்களின் அர்ப்பணிப்பு துல்லியமானது. இவ்வாறு அதிகமான வேலைப் பளுவை ஏற்று தங்கள் குடும்பத்தை சிறப்பாக வழிநடத்துவதில் இல்லத்தரசிகளின் பங்களிப்பு பாராட்டுதலுக்கு உரியது.



கொரோனா பெருந்தொற்று காலத்தில் மருத்துவத்துறையில் பணியாற்றும் பெண் மருத்துவர்கள் தங்கள் குடும்பம் மற்றும் குழந்தைகளை பிரிந்து உலக மக்களை காக்கும் பொருட்டு உண்ணாது உறங்காது பணியாற்றிய பெண் மருத்துவர்களின் அர்ப்பணிப்பு வணக்கத்திற்குரியது. கொரோனா மருத்துவ முகாம்களில் உடல் முழுவதும் அங்கியை அணிந்து நோயாளிகளுக்கு மருத்துவம் பார்த்ததிலிருந்து ஆறுதல் கூறியது வரை பெண் மருத்துவர்களின் பணி அரும்பணி. இவர்கள் தனது உயிரை பொருட்படுத்தாது மக்களுக்காக இக்காலகட்டத்தில் சேவை செய்யும் கலியுக தெய்வங்கள் என்றே கூறலாம் .இந்த நேரத்தில் அவ்வாறு மருத்துவ சேவையில் அர்ப்பணித்து உயிர் நீத்த பெண்மருத்துவர்களின் தியாகத்தை போற்றிடுவோம்.தனது குழந்தையை கூட அள்ளி அணைக்க முடியாது கண்ணீர் வடித்த பெண் மருத்துவர்களின்,செவிலியர்களின் சூழலை சொல்லால் போற்றிட இயலாது. உலக மருத்துவத்துறையில் கொரோனா காலத்தில் பெண்களின் பணி பெரும்பங்கு வகித்துவருகிறது.

குரு ஸ்தானத்தில் இருந்து இவ்வுலகை அறிவு நிறைந்த சமூகமாக உருவாக்கும் ஆசிரியப் பணியில் கொரோனா பெருந்தொற்று காலத்தில் சிறந்த கல்வியினை புகட்டுவதில் ஆசிரியைகள் எதிர்நோக்கிய சவால்கள் எண்ணில் அடங்கா. வீட்டில் தனது குடும்பத்தாரின் அன்றாட வாழ்வியலையும் பார்த்துக் கொண்டு தனது குடும்பத் தேவைகள் குழந்தைகளின் கல்வியையும் வழங்கி இதனிடையில் தனது ஆசிரியை பணியினையும் செவ்வனே செய்வதில் இவர்களின் அர்ப்பணிப்பு வணக்கத்திற்கும் போற்றுதலுக்கும் உரியது. இன்று கற்பிக்கப்படும் பாடத்தினை முதல் நாளே அறிந்து முறைபடுத்தி தெளிவதில் இருந்து மாணவர்களுக்கு கணிணி நேரலை நேரத்தினை வழங்கி அனைத்து மாணவர்களையும் நேரலையில் ஒருங்கிணைத்து கல்வியை வழங்கி அவர்களின் சந்தேகங்களுக்கு தெளிவுபடுத்துவது வரை கல்வி வழங்குவதில் ஆசிரியைகளின் பணி அரும்பணி. இந்த கொரோனா காலத்தில் பெற்றோர் ஆசிரியர்களின் இடையேயான உறவு மேம்பட்டுள்ளது என்பது மகிழ்ச்சியான ஒன்று தான் என்றாலும் ஆசிரியர் மாணவர்களின் உறவில் நெடிய இடைவெளிதான். தன்னிடம் கல்வி பயிலும் மாணவர்களை தனது குழந்தைகளாக பாவித்து கல்வி புகட்டும் ஆசிரியைகளுக்கு இந்த காலம் வசந்தகாலம் என்று சொல்ல இயலாத காலம் தான்.



கலைவாணி மகேந்திரன்
(மலேசியா)

நோய் தொற்று பரவாமல் பாதுகாத்ததில் மருத்துவர்களுக்கு இணையான பணி என்றால் அது துப்புரவு தூய்மை பணிதான். பொது சுகாதாரத்தை பேணிக் காப்பதில் துப்புரவு பணி மிகுந்த பங்கு வகிக்கிறது.இத்துறையில் பணியாற்றும் பெண்கள் மருத்துவர்களுக்கு இணையாக அங்கி பாதுகாப்பு உபகரணங்களை அணிந்து பணி செய்வதில் பெரும் இடர்களை சந்தித்தனர் என்பது தான் நிதர்சனமான உண்மை. இக்காலக்கட்டத்தில் தூய்மைபணியில் பணியிலிருந்த பெண்கள் சுகாதாரத்தை பேணிக் காத்தனர் என்றாலும் அவர்களால் உணவு கூட உண்ண முடியவில்லை என்பது வருந்ததக்கது. .மருத்துவ கழிவுகளை அகற்றும் பணியில் ஈடுபட்ட தூய்மை பணிப்பெண்கள் நோய்தொற்றுக்கு உள்ளானர்கள் என்பது பல பேர் அறிந்திடா செய்தியாகும்.எனினும் தனது உயிரையும் பொருட்படுத்தாது நாட்டின் சுகாதாரம் மற்றும் நோய் பரவலை தடுத்து பாதுகாத்தில் இவர்களின் பெரும்பங்கும் அடங்கும். நோய் தொற்று காலத்தில் பணிசெய்த தூய்மை பணிப் பெண்களும் போற்றுதலுக்கு உரியவர்களே.


மங்கையராகப் பிறப்பதற்கே – நல்ல மாதவஞ் செய்திட வேண்டும்,
பங்கயக் கைந்நலம் பார்த்தலவோ – இந்தப் பாரில் அறங்கள் வளரும்,

கோடான கோடி உயிர்களை இந்த கொரோனாவிற்கு பறிகொடுத்து எதிர்காலமே புதிர்காலமாக இருந்த சமயத்தில் அனைத்து துறைகளிலும் பெண் என்பவளின் தியாகங்களும், போராட்டங்களும் சவால்மிக்க சூழலை சமாளித்தது என்பதே நிதர்சனம்.

**பாலின சமத்துவம்
பேணிடுமோர்,
பாரினை என்றிங்கே
கண்டிடுவேன்,
பேதங்கள் உரைக்கும்
மானிடரை
பிரேதங்கள் என்றே
நாமு உரைப்போம்.
பாரதி கண்டிராத புதுமை
பெண்ணாக
பார் முழுதும் அறியச்
செய்வோம்.**



அனைவருக்கும் தமிழ் சித்திரை புத்தாண்டு வாழ்த்துக்கள்



# தமிழக அரசியலில்
## வாக்குகளும், வாக்குறுதிகளும்





நடுப்பக்கம்

சேவியர்
(தமிழ்நாடு)

**உழைப்புக்கான வேலை தருவேன் என்பவர்களை நிராகரிப்பார்கள், உழைக்காமல் உண்ண அரிசி தருவேன் என்றால் தலையாட்டுவார்கள்.**

முதல் முறை ஏமாந்தால்
ஏமாற்றியவன் புத்திசாலி,
இரண்டாம் முறையும்
ஏமாந்தால்
ஏமாந்தவன் முட்டாள் !







வாக்குறுதிகள் ஒன்றும் புதிதல்ல. ஒவ்வோர் நிகழ்விலும், ஒவ்வோர் உடன்படிக்கையிலும், ஒவ்வோர் ஒப்பந்தத்திலும், ஒவ்வோர் சந்திப்பிலும் வாக்குறுதிகள் பரிமாறப்படுகின்றன. காதல் வாக்குறுதிகள் முதல், தேர்தல் வாக்குறுதிகள் வரை நாம் தினமும் வாக்குறுதிகளைச் சந்திக்கிறோம். சில வாக்குறுதிகள் காலைப் பனித்துளியைப் போல கதிரவன் வந்ததும் காணாமல் போய்விடுகின்றன. சில வாக்குறுதிகள் கால்வாய் போல, கோடைக்காலம் வரை தாக்குப்பிடித்து வற்றிப் போகின்றன. சில வாக்குறுதிகள் தான் கடைசி வரை கனிதந்து வாக்குறுதிக்கு வாய்மை சேர்க்கின்றன.

அதிலும் குறிப்பாக தேர்தல் நேர வாக்குறுதிகள் வாக்குகளை நோக்கிய வாய்க்கரிசி தான். எந்த கட்சியும், தான் சொன்ன அத்தனை வாக்குறுதிகளையும் நிறைவேற்றியதாய் நினைவில்லை. குறைத்த பட்சமேனும் நிறைவேற்றுகின்ற கட்சிகள் கண்ணியத்துக்குரியவையாய் கவனிக்கப்படுகின்றன.

வாக்குறுதி என்பது செயல் திட்டமாக இருக்க வேண்டும். அப்போது தான் ஒரு ஆரோக்கியமான சமூகத்தைக் கட்டியெழுப்பும் வல்லமை அதற்கு இருக்கும். அவை தற்காலிக தலைவலித் தைலங்களாக இருக்கும்போது நீண்ட காலப் பலனை சமூகம் பெறுவதில்லை. மாறாக அவை சுயநலவாதிகளின் கையில் விழுந்து காலாவதியாகிப் போகின்றன.

வாக்குகளைக் குறிவைத்து எறியப்படுகின்ற வாக்குறுதிகள், மாம்பழத்தை நோக்கி எறிகின்ற கற்களைப் போன்றவை. பழம் கீழே விழுந்தபின் அந்த மரத்தை யாரும் கவனிப்பதில்லை. வேர்களுக்கு நீர் தருவேன், நிலத்துக்கு உரம் தருவேன், காற்றோட்டமான தோட்டம் தருவேன் எனும் வாக்குறுதிகளெல்லாம் கனிகளைப் பிடுங்கியபின் காணாமல் போய்விடும். வாக்குறுதிகள் வாக்குகளின் எண்ணிக்கைக்காக இல்லாமல், வாக்காளனின் வாழ்வுக்காக என மாறும்போது தான் அரசியல் பணி தூய்மையானதாக மாறும்.

நமது வாக்காளர்களை அப்பாவிகள் என்பதா ? ஏமாளிகள் என்பதா ? அல்லது கோமாளிகள் என்பதா எனத் தெரியவில்லை. உழைப்புக்கான வேலை தருவேன் என்பவர்களை நிராகரிப்பார்கள், உழைக்காமல் உண்ண அரிசி தருவேன் என்றால் தலையாட்டுவார்கள். கல்வியை இலவசமாய்த் தருவேன் என்றால் கண்டு கொள்ள மாட்டார்கள், காலாட்டிக் கொண்டே குடிக்க பிரியாக காபி தருவேன் என்றால் தலையாட்டுவார்கள். மக்களுக்கு எது எதிர்காலத் தேவைக்கானது, எது தற்காலிகத் தப்பித்தலுக்கானது என்பது தெரியவில்லை.

வானவில்லை வளைத்து வாசல்படியில் கட்டுவேன் என்றால், ஓ.. அப்படியா ? என கொஞ்சமும் மூளையை பயன்படுத்தாமல் ஒத்துக் கொள்வார்கள். பின்னர் ஆட்சிக்கு வந்தபின், இருக்கும் வாசலையும் கழற்றிக் கொண்டு போய் விடுவார்கள். அதே ஆட்கள் அடுத்ததடவை வந்து,'நான் வானவில் தராததுக்குக் காரணம் பாகிஸ்தான் தான், அடுத்த முறை கண்டிப்பாக தருவேன்' என்றால் மீண்டும் தலையாட்டிப் பொம்மைகள் ஆகிவிடுவார்கள்.

எது சாத்தியம் ? எது சாத்தியமில்லை ? எது தேவையானது ? எது தேவையற்றது போன்ற சிந்தனைகள் ஒவ்வொரு வாக்காளருக்கும் இருந்தால் சரியான தேர்வுகளை எடுக்க அது உதவியாக இருக்கும்.

வாக்காளர்கள் ஒரு விஷயத்தை மனதில் கொள்ள வேண்டும். வெறுப்பு அரசியலை வெறுக்க வேண்டும். வெறுப்பு அரசியலை யாரெல்லாம் பரப்புகிறார்களோ அவர்களை வேரறுக்க வேண்டும். அந்த வெறுப்பு அரசியல் எது சார்ந்ததாய் வேண்டுமானாலும் இருக்கலாம். என் இனம் சார்ந்ததாக, என் மதம் சார்ந்ததாக, என் சாதி சார்ந்ததாக எப்படி வேண்டுமானாலும் இருக்கலாம். அதை நாம் நிராகரித்தே ஆகவேண்டும்.

மானுடம் வெறுப்பின் வழிகளில் நடக்க வேண்டியதல்ல. அது அன்பின் பாதையில் நடக்க வேண்டியது. அந்த அன்பின் அடித்தளத்தின் மீது கோடாரி வைக்கும் எந்தக் கொள்கையையும் மனித நேயம் மிக்க மக்கள் கடுமையாக எதிர்க்க வேண்டும்.

இவை பிரித்தாளும் அரசியல். குளத்தைக் கலக்கினால் தான் மீன் பிடிக்க முடியும்

17 ஆம் பக்கம் பார்க்க...


Dortmund நகரில்...
ஆடைகளின் இராஜமுத்திரை
S.K.SILKS GOLD PARAADISE
அனைத்து ஆடைகளும் புதுரகம்
அதிகமான தெரிவுகள்.
இமிரேஷன் நகைகள்
அனைத்திற்கும் நாடுங்கள்
Lockdown காலம் யாவரும் நலமாக இருங்கள். எந்த நேரமும் உங்கள் தேவைகளை பூர்த்தி செய்ய எம்முடன் இணைந்து இருங்கள் .
இணைவுக்கான தொலைபேசி எண்
01705429251
இனிய தமிழ் புத்தாண்டு வாழ்த்துக்கள்
SINCE-2003
Mobil: 01705429251 | Mr.P.Sritharan Proprietor
Adler Str 33 - 44137 Dortmund | Tel: 0231 9501 647



# தமிழக அரசியலில் வாக்குகளும், வாக்குறுதிகளும்

என்பார்கள். அழகாக ஒரு குளம் இருக்கும். அதில் மகிழ்ச்சியாக மீன்கள் நீந்திக் கொண்டிருக்கும். மலர்களும், இலைகளும் அந்த நீர்நிலையை வெப்பம் தாக்காமல் பாதுகாக்கும். திடீரென ஒருவன் வந்து குளத்தைக் கலக்குவான். மீன்கள் மூச்சுத் திணறி மிதக்கத் துவங்கும். அப்போது மீன்களை அள்ளி எடுத்துக் கூடையில் போட்டுக் கொண்டு போய்விடுவான்.

குளம் எனும் சமூகம் கலங்கும் போது அரசியல் வாதி வாக்கு அறுவடை செய்கிறான். அவன் போன பின் அமைதியாய் இருந்த குளம் கலங்கிப் போய் களையிழந்து, வாழ்விழந்து நிற்கும். அரசியல் சுயநலத்துக்காக பிரித்தாளும் நகர்த்தல்களைச் செய்தால், மானுடம் விழித்துக் கொண்டு அவர்களை விரட்ட வேண்டும். அது வெறும் பொருளாதாரத்தை மட்டுமல்லாமல், நமது வாழ்வின் அடி நாதத்தையே உடைத்துவிடும்.

வாக்குறுதிகளின் நம்பகத் தன்மையைப் பார்ப்பது போலவே, வாக்குறுதிகளைத் தருபவர்களின் நம்பகத் தன்மையையும் பார்க்க வேண்டும். நரிக்கு இடம் கொடுத்தால் கிடைக்கு இரண்டு ஆடு பிடிக்கும் என்பார்கள். நரியை நம்பி கோழியை அதனிடம் விட்டுச் செல்ல முடியாது. நமக்கு வாக்குறுதி கொடுப்பவர்கள் நரியைப் போல தந்திரமாய் நம்மை ஏமாற்ற முயல்கிறார்களா என்பதைக் கண்டறிவது வாக்களிக்க வேண்டியது காலத்தில் மிக முக்கியம்.

ஆட்டு மந்தையைப் போல ஏதோ ஒன்றைப் பிந்தொடர்ந்து ஓடுபவர்களால் தான் அரசியல் வியாபாரம் களை கட்டுகிறது. ஆட்டுவித்தால் ஆடுகின்ற கூட்டமாக நாம் இருக்கக் கூடாது வாருங்கள் நாமெல்லாம் இவர்களை எதிர்ப்போம்' என்று ஒரு குரல் கேட்டால் உடனே வெகுண்டெழுந்து ஒன்றன் பின் ஒன்றாக ஓடுகின்ற கூட்டம் தான் அரசியல்வாதிகளின் ஆதாயம். அப்படி ஒரு மந்தையை உருவாக்கத் தான் அவர்கள் வெறுப்பு அரசியலையோ, மத அரசியலையோ, பிரிவினை அரசியலையோ கையிலெடுக்கிறார்கள். வாக்காளனின் தேவை, ஏதோ ஒருவரை பிந்தொடர்வதல்ல. ஒரு கொள்கையைப் பிந்தொடர்வது.

ஒரு தேசத்தின் தலையெழுத்தை நிர்ணயிக்கக் கூடிய வலிமை வாக்குக்கு உண்டு. ஒரு வாக்காளனின் கையிலிருக்கும் அதிகபட்ச கண்ணியமான ஒரு விஷயம் வாக்கு. ஒரு வாக்காளனின் கையிலிருக்கும் ஒரு மிகப்பெரிய ஆயுதம் வாக்கு. ஒருவருடைய கற்பைப் போல அது தூய்மையானது. அதை எப்படிப் பயன்படுத்துகிறோம் என்பது மிக முக்கியம். நம்மிடம் விலைமதிப்பற்ற ஒரு வைரக்கல் இருந்தால் அதை ஏனோ தானோ என வீச மாட்டோம். அதே போல தான் நமது வாக்கும் காக்கப்பட வேண்டும். காரணம், வாக்கு நம்மை மட்டும் காப்பதல்ல, தேசத்தையும் காப்பது என்பதை மறந்து விடக் கூடாது.

சில தற்காலிக எலும்புத் துண்டுகளுக்காக நமது தன்மானத்தையே விற்று விடுவது எவ்வளவு கீழான செயல் அல்லவா? என்னைப் பொறுத்தவரை இந்த விஷயத்தில் கொஞ்சம் புத்திசாலித்தனமாய் வாக்காளர்கள் செயல்படலாம். வாக்குக்கான பணம் வாங்கினால் கூட, அவருக்குத் தான் வாக்களிக்க வேண்டும் என்பதில்லை. பணம் கொடுப்பது அவர்கள் செய்த தண்டனைகளின் பிராயச்சித்தம். நாம் வாக்களிக்கப் போவது தேசத்தை உயர்த்துவதற்கான உரிமைச் சத்தம். அதை நினைவில் கொள்வோம். 'ஐயோ காசு வாங்கிட்டேனே.. அவனுக்கு ஓட்டு போடணுமே' என்றெல்லாம் யோசிக்கவே தேவையில்லை. இந்த விஷயத்தில் மனசாட்சியை கொஞ்சம் ஓரமாய் உட்கார வையுங்கள், தப்பில்லை.

தலைமைப் பண்பு இல்லாதவர்களுக்கோ, குற்றப் பின்னணி உள்ளவர்களுக்கோ வாக்களிக்காமல் இருப்பது நல்லது. ஒருவருடைய வாழ்க்கையின் பின்னணியை இப்போது மிக எளிதில் கண்டுணர முடியும். இணையம் அதற்குக் கைகொடுக்கும். அதை அலசி ஆராய்ந்து பின்னர் வாக்களிக்க வேண்டும். வெறும் வாயால் வடை சுடுபவர்களை வாக்கால் சுட்டு வீழ்த்த வேண்டும். தேர்தல் நேரத்தில் மட்டும் மதவாதியாக, தேச பக்தனாக, ஆலய ஆர்வலராக, சாதிப் பாதுகாவலனாக மாறும் மக்களை இனம் காண வேண்டும். எல்லையை விட்டே விரட்ட வேண்டும்.

தனிவாழ்வில் தூய்மையைப் பேணாத மனிதர்கள் பொதுவாழ்வில் தூய்மையைப் பேண முடியாது என்பது மறுக்க முடியாத உண்மை. எனவே ஒரு தலைவரை அவரது வார்த்தைகளை வைத்தோ, அவரது வாக்குறுதியை வைத்தோ நம்பிவிடுவது ஆபத்தானது. தனிமனித வாழ்வில் நேர்மையையும், கண்ணியத்தையும், பணிவையும் கடைபிடிக்காதவர்களை ஆதரிப்பது மடமையன்றி வேறில்லை. சக மனிதனுக்கு ஒரு துயரம் வரும்போதும் சுயநல சிந்தனை கொண்டிருப்பவனை எக்காரணம் கொண்டும் மக்கள் மன்னிக்கவே கூடாது. அவர்களை மீண்டும் ஆட்சிக் கட்டிலில் அமர வைக்கவே கூடாது.

அரசியல் என்றால் வாக்குறுதிகளின் களம் என்பது இன்று தவிர்க்க முடியாததாகி விட்டது. அதில் இலவசங்கள் இலவசங்கள் இலவசங்கள் எனும் முழக்கத்தை நோக்கி ஓடுவது நம்மையே நாம் அழித்துக் கொள்வதற்குச் சமம்.


பிரபலமான கவிதை வரிகள் தான் நினைவுக்கு வருகின்றன. அவன் ஒரு பட்டு வேட்டி பட்டிய கனவில் இருந்தபோது, கட்டியிருந்த கோவணமும் களவாடப்பட்டது.

வாக்குறுதிகள் வெறும் நாக்குறுதிகளாய் மாறிக்கொண்டிருக்கும் காலத்தில், வாக்காளன் எதிர்கால நோக்காளனாக மாற வேண்டியது காலத்தின் கட்டாயம். சிந்திப்போம், செயல்படுவோம்.










## இன்று களத்தில் இருக்கும் கட்சிகளின் ஆணிவேர்கள்!




அனைவருக்கும் தமிழ் சித்திரை புத்தாண்டு வாழ்த்துக்கள்



# YOUR FOOD

## POSITIVE / NEGATIVE



Bavvatharani R
Nallur

**The** current food culture is gummed with lots of unhealthy fast foods due to several reasons. Majority falls with lack of time to cook. People spent on spending time in restaurants, hotels and popular places to mix with hi fi groups and enjoy and establish good relationship with those in high positions and those who have good reputation. There are youngsters who spend most of their time outside with their friends and office mates. They all eat and enjoy fatty fast food and even get addicted to alcohol. Eating fast food make the youngsters contended and make them feel happy and proud to eat food in big restaurants. People are generally attracted by the posh environments and the warm welcome of hotel/restaurant staff. Gathering at these locations apart from food also force them to eat hotel foods.

The kind of food we eat plays a significant role in the way our body looks and functions. A single simple portion of food has the power to make us happy, energetic, inactive, satisfied, sleepy, nervous etc. According to yogic moralities, it is very important that the meal you eat contains food from which just fulfils your desires but also nourishes your body from the inside by taking positive pranic foods. The body has its own ways of storing the energy in many layers and here you are in charge of fuelling it.

Ayurveda suggests you to avoid excessive intake of 'negative' pranic foods in your diet: Foods that are negative in nature do not contribute anything to the body's or the mind's growth. Any food that is prepared mechanically, in a negative fashion and goes through excessive processing, will affect you. The foods which we eat go through under various kind of processing cycle, taken out their prana and makes them lifeless and of no use.

We can simply categorize all foods into 3 types.

Positive Pranic
- Negative Pranic
- Neutral

**Positive Pranic Foods:**
Winter melon (Ash Gourd)
Lemon
Honey
Coconut
Dates
Nuts and seeds
Raw and dried fruits
Ripe vegetables
Spices
Sprouted green grams
Whole grains
Legumes (peas, beans, lentils, etc.)
Cereals (rice, buckwheat, barley, millet, oats, teff, spelt etc.)

These positive pranic foods are high on nutritional value and can also help cure illnesses and provide vital energy for vigilance, maintain and rejuvenate the nervous systems, and intellect in the body. They uplift and enhance your energy levels, fulfil your health needs and actually help our body to retain positive energy, which can help heal so many problems and issues. Among the positive category foods, Ash Gourd and Honey are considered to be extremely positive food types. Too much of anything good for nothing. Therefore, consume them in moderate levels. Excess of it can cause problems.

Apart from this, you also can follow a positive pranic diet, Ayurveda suggest eating rainbow food - which is basically made by containing fruits and vegetables from varied food groups. Adopted in the right manner, it can lead you to a more holistic lifestyle.

**Negative Pranic Food**
Garlic
Onion
Asafoetida
Chili (Green Pepper/ Red Pepper)
Egg Plant
Coffee / Tea
Cocoa
Vinegar
Alcohol
Tobacco
Intoxicants

Negative Pranic food takes your life energy away. Even though there are numerous benefits claimed for garlic and onions in Ayurveda, garlic tops in the negative pranic list. Ayurveda specifically and strongly recommends you to avoid these two garlic, and onions in your food diet to have a healthy pranic body other than the few medicinal reasons. They can give a super boost for a moment but in the long term they tend to haphazard the energy from the body.

**Zero Pranic Food**
Potato, Tomato

Neutral Pranic food doesn't do much, really, other than making you lethargic and laziness. An active healthy adult can eat them, but for



those who have joint pains or Arthritis they should be better to avoid them.

Food is like the fuel for the body, if we put right kind of fuel in the machine only then it will function to its full capabilities. Instead, many of us fall into a "food coma." And then we need coffee, tea, and other stimulants to pick ourselves up and go on with the day. Sadly, a lot of people take it as a fact of life and an inevitable state of being. Daily food choices are essential to support good energy levels and ways of being. Rethink about your food and eating habits.






# ஒரு மனிதன் சராசரியாக எத்தனை பொய்களைத் தான் சொல்கிறான்?

**Dr.நிரோஷன் தில்லைநாதன்**
(யேர்மனி)



உங்களிடம் ஒன்று கேட்கின்றேன் பொய் சொல்லாமல் சொல்லுங்கள் பார்ப்போம்! நீங்கள் ஒரு மாதத்தில் எத்தனைப் பொய்களைச் சொல்வீர்கள்? ஒரு பொய்? இரண்டு பொய்கள்? ஐந்து அல்லது பத்து பொய்கள் இருக்குமா? அல்லது சீ... சீ... நான் போய் பேசவே மாட்டேன் என்று உங்களுக்குள் நினைத்து இப்பொழுது எனக்கு ஒரு பொய் சொல்கின்றீர்களா? சரி சரி விடுங்கள் இதற்கு அறிவியல் என்ன சொல்கின்றது என்பதைக் கொஞ்சம் அலசிப் பார்ப்போமா?

சரி, ஒரு மனிதன் சராசரியாக எத்தனை பொய்களைச் சொல்வான் தெரியுமா? ஒவ்வொருவரும் பேசும் போது பல பொய்களைச் சொல்வார்கள், ஆனால் அதுவே ஒரு தெரியாதவருடன் பேசும் போது, பத்து நிமிடங்களில் மட்டுமே சராசரியாக மூன்று பொய்களைச் சொல்வார்கள் என்பதை ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளார்கள். என்ன நண்பர்களே, நம்ப முடியவில்லையா? சரி அப்படி என்றால் இந்த உதாரணத்தைப் பாருங்கள்: படிப்பு எல்லாம் எப்படி போகுது? என்று கேட்பவரிடம், கடைசிப் பரீட்சையில் முட்டை வாங்கியவர் கூட நல்லா போகிறது என்று பொய் சொல்வதில்லையா. அது போன்ற சின்ன சின்ன பொய்களைக் குறிப்பாக நமக்குத் தெரியாதவர்களுடன் பேசும் போது நாம் உணர்ந்தோ உணராமலோ பொய்களைப் பேசிவிடுவோம். அடுத்த முறை நீங்கள் யாரும் தெரியாதவர்களுடன் பேசும் போது, இதை அவதானித்துப் பாருங்கள்.

இது ஒரு பக்கம் இருக்கட்டும், ஆனால் நாம் ஏன் பொய் சொல்கிறோம் என்று உங்களுக்குத் தெரியுமா? காரணம் இது தான்: மனிதன் என்றாலே ஒரு சமூகத்தில் வாழ்ந்து வேறு மனிதர்களுடன் தொடர்பில் இருக்கும் ஒரு உயிரினம் ஆகும். ஒன்று, இந்த சமூகத்தில் ஒரு பிரச்சினையும் இல்லாமல் அமைதியாகவும், சமாதானமாகவும் வாழ்வதற்குப் பொய்களைச் சொல்கிறோம், அல்லது இந்த சமூகத்தில் இருந்து ஏதாவது நன்மையைப் பெறுவதற்கும் நம்மை மற்றவர்களிடம் இருந்து உயர்த்திக் கொள்ளவும் பொய்களைச் சொல்கிறோம். எனவே சிறு வயதிலேயே பொய் சொல்வதையும், பிறர் பொய் சொல்வதைக் கண்டுபிடிப்பதையும் கற்றுக்கொள்ள ஆரம்பித்து விடுகின்றோம்.



சிறு வயதில் பொய் பேச ஆரம்பிக்கின்றோம் என்றால் எந்த வயதில் தெரியுமா? பிறந்து ஆறு மாதங்களில் நாம் பொய் சொல்லத் தொடங்கி விடுகின்றோம்! அடடா இது என்னடா புதுக் கதையா இருக்கு என்று யோசிக்கிறீர்களா? நீங்கள் நிச்சயமாகச் சிறு குழந்தைகள் காரணம் இல்லாமல் பெற்றோர்களின் கவனத்தை தங்கள் பக்கம் திருப்புவதற்காக அழுவதைக் கவனித்து இருப்பீர்கள், சரி தானே? இப்படி அழும் போது திடீரென்று அழுகையை நிறுத்திவிட்டு யாராவது தன்னை கவனிக்கின்றார்களா என்று பார்த்து, மறுபடியும் அழுவது கூட ஒரு விதமான பொய் தானே? சரி கைக் குழந்தைகள் இப்படிப் பொய் சொல்வார்கள், இதுவே பள்ளிக்குச் செல்லும் பிள்ளைகள் எத்தனைப் பொய்களைச் சொல்வார்கள் தெரியுமா? இந்தப் பிள்ளைகள் அவர்களின் பெற்றோர்களுடன் பேசும் போது சராசரியாக ஒவ்வொரு ஐந்தாவது வசனத்திலும் ஒரு பொய் இருக்கும் என்று விஞ்ஞானிகளால் கூறப்படுகிறது.

உங்களுக்கு ஒரு விஷயம் தெரியுமா? பொய் பேசுவது என்பது நமது மூளைக்கு ஒரு மிகவும் கடினமான விஷயம் ஆகும். எனவே பொய் சொல்பவர்களை இலகுவாகக் கண்டுபிடித்து விடலாம், ஏனென்றால் பொய்ச் சொல்லும் போது அவர்கள் ஒரு விதமான மன அழுத்தம் கொண்ட நிலையுடன், இருதயம் வேகமாகத் துடித்து, வியர்த்து, பேச்சில் தடுமாற ஆரம்பித்து விடுவார்கள். மேலும் அவர்களின் உடலின் நிலை, சைகைகள், கண்ணின் அசைவுகள் மற்றும் அவர்கள் உபயோகிக்கும் வார்த்தைகளை வைத்துப் பொய் சொல்வதைக் கண்டுபிடிக்கலாம். இது ஆச்சரியமாக இல்லையா?

சரி நண்பர்களே இனி நீங்கள் கூறுங்கள். பொய் சொல்பவர்களை எப்படிக் கண்டுபிடிக்கலாம் என்று உங்களுக்குக் கூறிவிட்டேன். உங்களுக்கு ஒன்று தெரியுமா? நானும் கூட ஒரு பொய்யைச் சொல்லி விட்டேன்! அது என்ன பொய் என்று கண்டுபிடியுங்கள் பார்ப்போம். கண்டு பிடித்து உங்கள் பதிலையும், எனது சிறு கட்டுரை பற்றிய அபிப்பிராயத்தையும் எனக்குக் கண்டிப்பாக எனது முகநூல் பக்கத்தில் **(www.facebook.com/scinirosh)** அறியத் தாருங்கள்!




நீண்டகாலம் மக்கள் மனதில் நம்பிக்கை ஒளி பரப்பும் தங்க நகையகம்
Jaffna Bazar Jewellery
Jaffna
JB
Bazar
Jewellery
இனிய தமிழ் புத்தாண்டு வாழ்த்துக்கள்
தங்க நகைகளின் மொத்தவியாபாரிகள் எம்மிடம் நகைகள் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.
2021 ஆண்டுக்கான புத்தம் புது டிசைன்கள், கலைநயம் மிளிரும் தரமான தங்க நகைகள் எம் கையிருப்பில்.
பொன்னுருக்கு, காதுகுத்து வைபவங்களுக்கு எம்மை அழையுங்கள்
திருத்த வேலைகள் குறுகிய காலத்துள் செய்து தரப்படும்.
KADHIR
Lalla
Basmati Rice
BASMATI
ஆலயங்களுக்கு தேவையான பூஜை பொருட்கள் எம்மிடம் நிறைவாக உண்டு
உங்கள் இலத்திற்கு தேவையான மளிகைப் பொருட்கள் என்றும் போல் மலிவு விலையில் கிடைக்கும்
பசுமையான மரக்கறி வகைகள்
கடல் உணவு வகைகள்
அனைத்தும் எம்மிடம் தரமாக மலிவாகக்கிடைக்கும்
Jaffna Bazar
Jaffna Bazar, Kaiser Straße.49 ,
69329 Frankfurt Main
Tel: 069 25 62 6353 \ 0049 69 25626353
0049 179 4792961 \ 0049 151 71520425
அனைவருக்கும் தமிழ் சித்திரை புத்தாண்டு வாழ்த்துக்கள்



# வாழ்த்துவதால் வளரலாம் மன இறுக்கம் போக்கலாம்!

கரிணி (யேர்மனி)

வாழ்க்கையில் ஒவ்வொரு விடயமும் ஒன்றோடொன்று இணைப்பில் உள்ளது. அந்த இணைப்பின் துணையிலே தான் இயங்கிக் கொண்டிருக்கிறது. இந்த தொடர்புகள் எவ்வளவுக்கு துல்லியமாகவும், ஆரோக்கியமாகவும் இருக்கிறதோ அதற்கமைய வீரியமாகவும் இருக்கும். இணைப்பில் சிக்கல்கள் ஏற்படுகையில் பரந்து விரிந்த நிலை மாறி இறுக்கமான நிலை ஏற்படும்.

அதிர்வலைகளிலேயே ஒவ்வொரு செயற்பாடும் இயங்கிக் கொண்டிருக்கின்றது. ஒரு மலரினும் மெலிய இறகின் அசைவு கூட அதிர்வலைகளை பரப்பிக்கொண்டே சென்று மாற்றங்களை ஏற்படுத்துகிறது. ஒன்றோடொன்று முட்டி மோதுவதால் புதிதான அசைவுகளும் விளைவுகளும் ஏற்படுகின்றன.

பூக்கள் பூக்கும் போதே வண்டுகள் ஈர்க்கப்படுகின்றன, பூக்களில் தேனை பருகிய வண்டுகள் தம் கால்களில் ஒட்டிய மகரந்தங்கள் மூலம் அத்தாவரத்தின் இனவிருத்தியை மேலும் பெருக்கி நன்மை புரிகின்றன. இவை இயற்கையாகவே ஏற்படுத்தப்பட்ட பிரதியுபகாரம். குளிர் காலங்களில் உணவுத் தேவைக்காக அணில்கள் பெரு மரங்களின் விதைகளை ஆங்காங்கே மண்ணில் புதைத்து மறைத்து சேமித்து வைக்கின்றன. பின்பு தாம் வைத்த இடங்கள் பலவற்றை மறந்தும் விடுகின்றன. குளிரைத் தொடர்ந்து வரும் மழையிலும் அதனைத் தொடர்ந்து வரும் வசந்த காலத்திலும் இவ் விதைகள் முளைத்து மரங்களாக வளரத் தொடங்கிவிடும். குளிர் தேசங்களில் அணில்கள் மூலம் காடுகள் வளம் பெறுகின்றன. இப்படியான தொடர்பு சங்கிலி மூலம் இயற்கை தன்னை சமப்படுத்திக் கொள்ளும். மனித அறிவியலில் வளர்ச்சியும், தனிப்பட்ட வாழ்வில் மட்டும் காட்டப்படும் கரிசனையாலும் வாழப்படுகின்ற வாழ்க்கை முறையானது இயற்கை சுற்றுவட்டத்திற்கு முரணாக அமைகிறது.

நிலத்தில் ஒரு நெல்லை நாட்டும் போது சிறிது காத்திருப்பின் பின் நெற்கதிராக பலமடங்காக கிடைக்கிறது. இது படைப்பின் நீதி. எதை வெளிப்படுத்துகின்றோமோ அது வெளியில் சென்று அதிர்வலைகளை ஏற்படுத்தி வளர்ச்சியடைந்து பன்மடங்காக திரும்புகிறது.

அற்புதமான மற்றும் சிக்கலான எண்ண அலைகள் வான்வெளியில் பரவிப் பரந்து இருக்கின்றது. அவை உடலுக்கு வெளியே பெரிய அளவிலும் புத்திக்கு உட்பட்டு சிறிய அளவிலும் காணப்படுகின்றன. எண்ணங்கள் வெளிப்படும் போது அதிர்வலையோடு அவை சார்ந்த விடயங்களை நோக்கி சென்று அவற்றை ஈர்த்துக் கொண்டு வருகின்றன. உதாரணமாக எப்போதும் தன்மீது கழிவிரக்கப்பட்டுக் கொண்டே இருக்கும் நபர்கள் தொடர்ச்சியான வேதனைகளை சந்திப்பதை கண்டிருப்போம். என்றும் கலகலப்பாக பிறரோடு நல்ல அதிர்வலைகளை பரப்பிப் கொண்டிருப்பவர்கள் எப்போதும் மலர்ச்சியாக இருப்பதை கண்டிருப்போம். நல்லதே நடக்கும் என பிறர் தரும் ஆறுதல் வார்த்தைகள் ஏதோ ஒரு நம்பிக்கையை தந்து விடுகிறது. வார்த்தை பிரயோகிக்கப்



படும் விதம், அதன் அதிர்வு, எண்ணத்தில் உருவான நம்பிக்கை என்பன நல்லதொரு சூழலை மனதளவில் ஏற்படுத்துவதோடு சொல்பவருக்கும் அதனை கேட்பவருக்கும் இடையேயான எதிர் தாக்கத்திலும் நல்லதொரு பரிமாற்றமே நிகழ்கிறது.

பெற்றோர் மற்றும் தாத்தா பாட்டி கால்களில் விழுந்து ஆசிகள் பெறுவது தொன்று தொட்டு நடைபெற்று வரும் வழக்கமாகும். தமது வழி சந்ததிகளுக்கு எவ்வித சலனமுமின்றி அவர்கள் வாழ்த்துக்கள் வழங்கும் போது நிறைவான சக்தி பரிமாறிக் கொள்ளப்படுகிறது. இதுவே தன்னலமற்று பாகுபாடின்றி எல்லாவற்றையும் நல்ல எண்ணத்தோடு வாழ்த்தும் போது எப்போதுமே அகமும், புறமும் மலர்கிறது.

குழந்தைகள் எங்காவது முட்டிக் கொண்டு வலிப்படுகையில் அந்த பொருளை அடி என்று செல்லமாக அதற்கு தண்டனை வழங்கி குழந்தைகளை சமாதானப்படுத்துவதை பார்க்கின்றோம். இந்நிலையில் வளர்பவர்கள் தம் மீது தவறு இருப்பினும் தமக்கு பாதிப்பை ஏற்படுத்திய விடயங்களை எதிர்த்து தாக்குவதை விரும்புவார்கள். அவ்வாறன்றி தமது கவனக்குறைவு என எண்ணமூட்டப்பட்டு வளர்பவர்கள் பிற விடயங்களை மதிக்க கற்றுக் கொள்வார்கள். இன்னும் கவனத்திறனை வளர்த்தும் கொள்வார்கள்.

நேசிப்பு என்பது பிற நல்வாழ்வை பார்த்து ஆனந்தப்படுவதே. எவரையும், எதனையும் அதன் வாழும் வழியில் இன்னல்கள் விளைவிக்காது நன்மைகள் புரிவதே. இந்நிலையிலேயே உண்மையான வாழ்த்தையும் வழங்க முடியும்.

மன இறுக்கமே நோய்கள் பலவற்றிற்கு ஆதாரமாக விளங்குகிறது. எண்ணத்தால் தான் உடல் ஆளப்படுகிறது. தூண்டுதலின்படி செயற்படுகிறது. வார்த்தைக்கும், எண்ணத்திற்கும் தொடர்புண்டு.

'வாழ்க வளமுடன்!' என்ற வாழ்த்தானது பிறருக்கோ, பேரண்டத்துக்கோ உணர்வுபூர்வமாக செலுத்தப்படும் போது அகம் விரிவடைகிறது. பாகுபாடற்று பிறரை வாழ்த்தும்போது பிறர் மீதுள்ள கோபம், வெறுப்பு, வஞ்சகம், பொறாமை போன்ற எதிர்மறை எண்ணங்கள் விலகும். அந்த அதிர்வலைகளே தீய வழியில் உள்ளவர்களையும் நல்வழிப்படுத்தும். வாழ்த்துபவரின் மன இறுக்கம் கூட இல்லாமல் போகும். இதனால் வாழ்வும் மலர்ச்சியாக விளங்கும்.






# யேர்மனியில் நில் கவனி



## மருத்துவச் செய்திகள்




**வைரமுத்து சிவராசா (யேர்மனி)**

1. யேர்மனியில் 65.5% நோயாளிகள் கூறுகிறார்கள்; தமது மருத்துவர் எப்போதும் பல்வேறு சிகிச்சை விருப்பங்களைக் காண்பிக்கிறார்களாம். ஆனால் நோயாளிகள் விரும்பும் ஒரு சிகிச்சை முறையைத்தான் செய்கிறார்கள்.

2. அனைத்து ஜேர்மன் பெண்களில் 65% அதிகமானவர்கள் சுய மருந்துகளை எடுத்துக் கொள்கிறார்கள். ஆனால் 35% ஆண்கள் மட்டுமே இந்த மருந்துகளை சுயமாக எடுத்துக்கொள்கிறார்கள். அதாவது வைத்தியர்களால் கொடுக்கப்படும் மருந்துகள் குளிசைகளை ஆண்கள் அக்கறையீனம் சோம்பேறித்தனத்தால் 35 வீதம் பேர் தான் தாமாக எடுத்து மருந்து மற்றும் குளிசைகளைப் பாவிக்கிறார்களாம்.



3. கண்புரை சிகிச்சைக்கு ஜெர்மனியில் ஒவ்வொரு ஆண்டும் 8,000,000 பேருக்கு செயற்கை லென்ஸ்கள் பயன்படுத்தப்படுகின்றனர்.

4. லேசான சுவாச நோய்த் தொற்றுகளின் சிகிச்சையின் அடிப்படையில் முந்தைய ஆண்டை விட 43% பேர் குறைவான நுண்ணுயிர் (Antibiotika) எதிர்ப்பிகள் 2020 வசந்த காலத்தில் எடுத்தவர்கள் எனவும் சுகாதாரப் பகுதியினர் தெரிவித்துள்ளனர்.Covid19 அச்சம் காரணமாக வைத்தியரை அணுகியது குறைவு.



5. 28% பேர் கூறுகிறார்கள் சிகிச்சை முடிவுகளை கேள்வி கேட்கும்போது அல்லது மாற்று வழிகளைக் கேட்கும்போது பதில்கூற மருத்துவர்கள் விரும்பவில்லை என தெரியவந்துள்ளது.

6.ஜெர்மனியில் மருத்துவரின் பரிந்துரைக்கு முரணானவற்றைச் சிலர் படித்தறிவதால் 19.8% நோயாளிகள் தமது சிகிச்சை பற்றி தங்கள் மருத்துவரிடம் தகராறு செய்கிறார்களாம்.

7.20% ஜேர்மனியர்கள் தங்கள் வாழ்க்கையில் ஒரு முறையாவது ஒரு கவலைக் கோளாறால் பாதிக்கப்படுகின்றார்கள் என சுகாதாரப் பகுதியினர் தெரிவித்துள்ளனர்.

8. யேர்மனியிலுள்ள நோயாளிகளில் 56.6% பேர் மருத்துவரின் முடிவுகளை மட்டுமே நம்பி தமது சுகாதார தேவைகளை நிவர்த்தி செய்கின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

9. 46.3% பேர் ஏற்கனவே நோய்கள், சிகிச்சை அல்லது மருந்துகள் பற்றி அறிந்து மருத்துவரிடம் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட தடவைகள் வருகை தந்து சிகிச்சை பெற்றுவருகிறார்களாம்

10.யேர்மனிய நோயாளர்களில் 19.9% பேர் தங்களுக்குடைய நோய்க்கு என்ன வேண்டும் என்று மருத்துவரிடம் கூறி, அவர்களுடன் இணைந்து மிகவும் பொருத்தமான சிகிச்சையை தீர்மானிக்கிறார்கள்.

11. ஜெர்மனியில் ஒவ்வொரு ஆண்டும் 8,000 பேர் கல்லீரல் புற்றுநோயால் இறக்கின்றனர் என சுகாதாரப் பகுதியினர் அறிவித்துள்ளனர்.

12. யேர்மனிய சுகாதாரத்துறையில் தற்போது 5.7 மில்லியன்பேர் கடமை புரிகிறார்களாம். இவர்களில் 360,000 மருத்துவர்கள் உட்பட ஜெர்மன் சுகாதார அமைப்பில் பணிபுரிகின்றனர்.

# வெற்றிமணி திருமண சேவை



## நீங்களே பேசிக்கொள்ளுங்கள்

**மணமகள் தேவை**

யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் ஜெர்மனியில் nordrhein westfalen பகுதியை வசிப்பிடமாகவும் இருக்கும் பெற்றோர். ஜெர்மனியில் பிறந்து வளர்ந்த WHOLESALE CUSTOMER MANAGER ஆக பணியாற்றும் தங்கள் 27 வயது மகனுக்கு கிறிஸ்தவமதத்தைச் சேர்ந்த நல்ல குணமடைய மணமகளை தேடுகின்றனர் பெற்றோர். உறவினர் மாத்திரம் தொடர்பு கொள்ளவும்.
தொடர்புகளுக்கு:- (0049)- 017691481889

**மணமகள் தேவை**

யேர்மனியில் Nordrhein-Westfalen இல் பிறந்து கல்விகற்று சுவிஸ் நாட்டில் சிறந்த பதவிவகிக்கும் 31 வயது உடைய மணமகனுக்கு நற்குணமுடைய கல்விகற்ற கிறிஸ்தவ மணமகளைத் தேடுகின்றோம். (யேர்மனி அல்லது சுவிஸ் நாட்டில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது ) 2 அல்லது 3 வயது குறைந்தவர்கள் விரும்பத்தக்கது. பெற்றோர் உறவினர்கள் மட்டும் தொடர்பு கொள்வும்.
தொடர்பு இலக்கம்: 0049 152 1051 2973

**மணமகள் தேவை**

ஜெர்மனியை வதிவிடமாகக் கொண்ட 27 வயது மணமகனுக்கு செவ்வாய் தோஷம் உள்ள மணமகள் ஜெர்மனியை வதிவிடமாகக் கொண்டவரை எதிர்பார்க்கிறோம். மணமகன் கல்விப் தகமை ( m.sc Account Manager) உயர் சைவ வேளான். 38 புள்ளி கிரகபாவம் விரும்பத்தக்கது. திருமணத்திற்கு பின்மணமகன் வசிக்கும் நகரில் வசிக்க விரும்புபவர்கள் விரும்பத்தக்கது. பெற்றோர் மாத்திரம் தொடர்பு கொள்ளவும்.தொடர்புகளுக்கு:- 4915736472292

**மணமகள் தேவை**

இந்து மதத்தைச் சேர்ந்த யேர்மனியில் பிறந்து கல்விற்று (Machinenbau) என்ஜினியராக கடைமையாற்றும் 30 வயது உடைய ஆண்மகனுக்கு யேர்மனியில் Nordrhein-Westfalen இல் மணமகள் தேவை. பெற்றோர் மட்டும் தொடர்புகொள்ளவும்.
தொடர்பு இலக்கம்: 0175 850 1489

**மணமகன் தேவை**

யேர்மனியில் Nordrhein-Westfalen இல் பிறந்து கல்விகற்று யேர்மனியில் நல்லபதவியில் இருக்கும் 29 வயது நிரம்பிய மணமகளுக்கு நற்குணமுடைய கல்விகற்ற கிறிஸ்தவ மணமகளைத் தேடுகின்றோம். 1 அல்லது 3 வயது கூடியவர்கள் விரும்பத்தக்கது. யேர்மனியில் வசிப்பவர்கள் மட்டும் விணண்பிக்கவும். பெற்றோர் தொடர்பு கொள்ளவும். தொடர்பு இலக்கம்: 0049 163 5166 298

மணமகள், மணமகன் தேவைகளை பிரசுரிக்கலாம். 3 தடவை பிரசுரிக்க குறைந்த கட்டணமே அறவிடப்படும்.

விளம்பர தொடர்புகள்:
வட்சப்பில்: 00491631992334.
ஆன்மிகத் தென்றல் : த.புவனேந்திரன்
Telefon: +49 172 83 42 116

அன்பும் அறனும் உடைத்தாயின்
இல்வாழ்க்கை பண்பும் பயனும் அது

## 25 வருட நினைவை முன்னிட்டு ஒரு பின்னோட்டம்

# உலக கோப்பை - கிரிக்கெட் 1996




**ஜூட் பிரகாஷ்**
(மெல்போர்ன்)

**1996** இல் கிரிக்கெட் உலகக் கிண்ணம் இந்திய உப கண்டத்தில் அரங்கேற ICC ஒத்துக் கொண்டதே ஒரு பெரிய கதை. கிரிக்கெட், அதுவும் உலகக் கோப்பை, ஏதோ தன்னுடைய பாட்டன் வீட்டு சொத்து என்று நினைத்து, ICCI ஆட்டிப் படைத்துக் கொண்டிருந்த இங்கிலாந்திற்கு, இந்தியாவின் Dalmiya வின் தலைமையில் ஆசிய நாடுகள் வைத்த Checkmate தான் இந்தியா–பாக்கிஸ்தான்–இலங்கையில் நடைபெற்ற 1996 Wills World Cup ஊரி.

1987 உலக கிண்ணப் போட்டிகளை வேண்டா வெறுப்பாக இந்தியாவிற்கும், பிறகு 1992ஐ ஒஸ்ரேலியாவிற்கும் விட்டுக் கொடுத்து விட்டு, எப்படியும் 1996 உலக கிண்ணம் கிரிக்கெட்டின் தாய் மடிக்கு திரும்பி விடும் என்ற நப்பாசையில், இருந்த இங்கிலாந்திற்கு, Test கிரிக்கெட் விளையாடும் ஆசிய நாடுகள் மூன்றும் இணைந்து வழங்கிய அதிர்ச்சி வைத்தியத்தை, The Times பத்திரிகை "Asian Tigers twists Lord's by tail" என்று வர்ணித்தது.

காலனித்துவ ஆதிக்கத்தில் இருந்த கிரிக்கெட்டிற்கு விடுதலை கிடைத்ததும், கிரிக்கெட் வர்த்தக மயமானதும் (commercialised), 1996 உலக கிண்ணத்தோடு தான். உலக கிண்ணத்தை, மூன்று நாடுகள் இணைந்து அமைத்த PILCOM (Pakistan India Sri Lanka Organising Committe) ஒழுங்கமைத்தது.

USD கிரிக்கட் வரலாற்றில் முதல் தடவையாக TV rightsI ஏலம் விட்டு, சுளையாக 14 மில்லியன்களை கறந்தது PILCOM. சப்பிற chewing gum

**உலக கோப்பையின் இறுதியாட்டம் 17 March 1996ம் அன்று கராச்சியில் இடம்பெற்றது. அந்த நாள் ஊரடங்கு போட்டதைப் போல, கொழும்பு நகரமே வெறிச்சோடியது.**




முதல் குடிக்கிற coco cola வரை எல்லாவற்றிற்கும் official sponsor அந்தஸ்து கொடுத்து, பண மழையில் நனைந்தது PILCOM.

உலக கிண்ணத்தை நடாத்திய PILCOM USD 50 மில்லியன் இலாபம் ஈட்ட, அதில் பங்கு வகித்த இலங்கைக்கு எந்தவித பங்கும் கிடைக்கவில்லை. போட்டிக்கான செலவுகளை ஆரம்பத்தில் underwrite பண்ண இலங்கை மறுத்ததால், போட்டியில் கிடைத்த இலாபத்தில் பங்கு கொள்ள முடியாமல் போய் விட்டது.

1996 உலக கிண்ணத்தில் நடந்த Coke vs Pepsi விளம்பரச் சண்டையை, ambush marketing strategy, மறக்க முடியாது. பின்னாட்களில் Marketing பாடங்களில் அருமையான ஒரு case study கவும் அந்த சம்பவம் இடம்பிடித்தது. மில்லியன் கணக்காக பணத்தை வாரி இறைத்து coke உலக கிண்ணத்தின் official sponsor பட்டத்தை வாங்க, திறமையான "nothing offical about it" வை என்ற சுலோகங்களுடன் Pepsi யின் விளம்பரங்கள் மக்கள் மனங்களில் கோலோச்சிக் கொண்டிருந்தன.

### Pepsi விளம்பரங்களில் கலக்கல்

Pepsi யின் விளம்பரங்களில் தோன்றிய Sachin, Azhar, Holding, Akram, Waqar, Donald போன்ற நட்சத்திர கிரிக்கெட் வீரர்கள் Pepsi யின் விளம்பரங்களில் கலக்கினார்கள். இன்னொரு விதமான விளம்பரத்தில், Offical Fine leg என்று கிரிக்கெட் fielder ஐ காட்டி விட்டு, unofficial fine leg என்று கட்டை சட்டை போட்ட பெட்டையை Pepsi காரன் காட்டுவான்.

1996 உலக கோப்பையை இந்தியா, பாக்கிஸ்தான், ஒஸ்ரேலியா இல்லாவிடில் தென்னாபிரிக்கா அணிகள் தான் வெல்லும் என்று போட்டிகள் ஆரம்பமாக முதல் கணிக்கப்பட்டது. உலகம் போடும் கணக்குகளை மாற்றிப் போடும் வல்லமை படைத்த ஒரு சக்தி, இலங்கைத் தீவின் வடக்கில் நிலை கொண்டிருந்ததை, கணக்கு போட்ட வித்துவான்கள் கணக்கில் எடுக்கத் தவறியிருந்தார்கள்.

கிரிக்கெட் உலகக் கோப்பை, Valentines Day ஆன 14 Feb 1996 அன்று தொடங்க ,இருந்தது. அதற்கு சரியாக இரண்டு கிழமைகளிற்கு முதல், 31 ஜனவரி 1996 அன்று பகல் பத்தே முக்கால் அளவில், இலங்கையின் மத்திய வங்கியை குறி வைத்து விடுதலைப் புலிகள் நடாத்திய தாக்குதல், உலகக் கிண்ணத்தின் போக்கையே மாற்றி விட்டது.

Feb 17 1996ல் கொழும்பில் இலங்கை அணியை எதிர்த்து விளையாட இருந்த ஒஸ்ரேலிய அணியும், Feb 25 1996ல் விளையாட இருந்த




மேற்கிந்திய அணியும், பாதுகாப்புக் காரணங்களை காரணம் காட்டி, இலங்கைக்கு வர மறுத்து விட்டன. கொதித்துப் போன கொழும்பு அரசாங்கமும் PILCO ஆம் எவ்வளவு முயன்றும் இரு அணிகளும் வர மறுத்து விட்டன.

25 ஆம் பக்கம் பார்க்க...

'சுவிஸ் மக்களின் நம்பிக்கையான காப்புறுதிகளுக்கும், ஓய்வுகாலத் திட்டமிடலுக்கும் நிபுணத்துவ வழிகாட்டி கல்லாறு சதீஷ்"



Aadaa Finance GmbH
Dr. (h.c) Nageswaran Arulrasa D.Litt (CEO)
Eidgenössische finanzmarktaufsicht Nr.35302
Fachmann Für Versicherung & Vorsorge
Hauptstrasse 54, 6015 Luzern, Switzerland
079 8000 100 | arulnages@yahoo.com
finma : 34598 cicero : 25605

aaDaa Finance 0798000100



இனிய தமிழ் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்




# பாக்குவெட்டி

பாரிஸ் நோக்கிப் பயணம் செய்வதற்காக அந்தத் தொடரூந்து காத்துக் கொண்டு நின்றது. அவசரமாக ஓடிச் சென்று தொடரூந்துக்குள் புகுந்தேன். இலக்கங்களைத் தேடி இருக்கையில் அமர்வதற்கு எத்தனித்த நான் என்னுடைய பொதிகளை இருக்கையின் மேலுள்ள பகுதியில் வைப்பதற்காக முயற்சித்தபோது ஒரு கரம் உதவிக்கு வந்தது. அது என்னுடைய இருக்கையின் முன்னே அமர்ந்திருக்கும் மலையாள மொழிபேசும் ஒருவர் என்பதை அறிந்து கொண்டேன். தொங்கிக் கொண்டிருந்த ஒரு பெல்ட்டை தன்னுடைய பேனாவால் தட்டிவிட்டார்.

என்னுடைய பையைத் தூக்கி மேலே வைத்தார். நாம் இருவரும் உரையாடிக்கொண்டிருக்க தொடரூந்து தொடர்ந்தது. நான் பேச்சினூடே அவருடைய தொடர்பு இலக்கத்தைக் கேட்டேன். கையிலிருந்த பேனாவை என்னிடம் நீட்டினார். அதில் எழுதப்பட்டிருந்த இலக்கங்கள் எனக்கு நன்றாகப் புரியவில்லை. சிரித்தபடி பேனாவை வாங்கி ஒரு தடவை திருப்பினார். பிரகாசமான வெளிச்சத்துடன் விலாசமும் தொலைபேசி இலக்கமும் தெரிந்தது. இருட்டுக்கு ஒளியூட்டியாக இதைப் பாவிக்கலாம் போல் இருக்கிறதே என்றேன். ஆம் என்று சிரித்தபடி மூடியைத் திருப்பிக் காட்டினார்.

நான் பேசுவதை அப்பேனா ஒலிப்பதிவு செய்து கொண்டிருந்தது. ஆச்சரியத்துடன் ஒரு பேனாக்குள் இத்தனை விடயமா என்று கேட்ட போது கீழ்ப்பகுதியைத் திருப்பி கைத்தொலைபேசி இலக்கங்களைத் தட்டினார். சிரிப்புத்தான் வந்தது. பேனாவை எடுத்து தன்னுடைய சட்டைப் பையில் பொருத்தினார். பேனா மூடியின் கம்பியில் ஒரு அழகான முத்துப் போன்ற பகுதியில் புகைப்படம் எடுப்பதற்குரிய கமெரா தென்பட்டது. ஆச்சரியத்தில் கண்கள் விரித்தேன். ஒரு பேனாக்குள் இத்தனை விடயமா என்று கேட்ட போதே ஒரு பாடல் என் நினைவுக்கு வந்தது.

விறகு தறிக்க கறி நறுக்க
வெண்சோற் றுப்புக் கடகு வைக்கப்
பிறகு பிளவு கிடைத்த தென்றால்
நாலா றாகப் பிளந்து கொள்ளப்
பறகு பறகு என்றே சொறியப்
பதமா யிருந்த பாக்கு வெட்டி
இறகு முளைத்துப் போவது ண்டோ?
எடுத்தீ ராயிற் கொடுப்பீரே

என்று இராமச்சந்திரக்கவிராயர் பாடிய பாடல் ஒன்று ஞாபகத்தில் தட்டியது. புலவர் வைத்திருந்த பாக்கு வெட்டி காணாமல் போனது. அந்தப் பாக்குவெட்டி தனக்கு எவ்வளவு முக்கியம் என்பதை எடுத்துக் கூறி எடுத்தவர் கொடுப்பாரேல் தன் மனக்குறை தீருமென இப்பாடலைப் பாடுகின்றார். என்னுடைய பாக்குவெட்டியால் சமையலுக்கு வேண்டிய விறகுகளை தறிப்பேன். காய்கறிகளை நறுக்குவேன். சோற்றுக்கு அரிசி அல்லது உப்பு இல்லையென்றால், அதனை அடகு வைத்து வாங்குவேன். பாக்குப்பிளவு கிடைத்தால் அதனை 4 பாகங்களாகப் பிளப்பேன். உடம்பிலே அரிப்பெடுத்தால் பறகு பறகு என்று சொறிவேன். இப்படியான பாக்குவெட்டி இறகு முளைத்து பறந்து சென்றிருக்க முடியாது. யாராவது எடுத்தீர்களானால் தயவு செய்து கொடுத்துவிடுங்கள் என்று அழகாகப் பாடுகின்றார். சேர்ந்தே இருப்பது வறுமையும் புலமையும் என்பதை அறிந்திருக்கின்றோம்.



இந்த பாக்குவெட்டி சமாச்சாரத்திலே நான் சிறுவயதில் பயன்படுத்திய ஒரு பென்சில் நினைவுகளைத் தீட்டியது. ஒரு நீண்ட பென்சில் அதன் கீழே ஒரு பிளாஸ்ரிக்காலான கை. அவசரத்தில் முதுகு சொறிய பலர் அதைப் பயன்படுத்துவார்கள். கையை நீட்டு என்று ஆசிரியர் அந்தப் பென்சிலைத் திருப்பி அடிப்பதை கண்டிருக்கின்றேன். இதைவிட பின் பென்ஞ்சில் இருக்கும் மாணவன் முன் பென்ஞ்சில் இருக்கும் மாணவனை சொறிந்துவிட்டு பேசாமல் இருக்கவே அதன்மூலம் பெரிய பிரச்சினைகள் தோன்றியதையும் கண்டிருக்கின்றேன்.

ஹமறால கதைகள் என்ற பெயரில் பல ளுசிங்கள கதைகள் இருக்கின்றன. அதில் ஹமகாமினி என்று ஒரு கதை. ஹமகாமினியை திருமணம் பேசுவதற்காக ஒரு தரகர் அவர் வீட்டிற்கு வருகின்றார். அப்போது அப்பெண் அவரை முதலில் ஒரு உரலைத் திருப்பி அதன் மேல் அமரச் செய்கின்றார். சிறிது நேரத்தின்பின் சற்று எழுந்து கொள்ளுகின்றீர்களா புட்டுக்கு சம்பல் இடிக்க வேண்டும் என்று எழுப்புகின்றார். சம்பல் இடித்தபின் உரலைத் திருப்பி அவரை இருக்கச் செய்கின்றாள். பின் கொஞ்சம் எழும்புகின்றீர்களா? பரணில் இருந்து ஒரு பொருள் எடுக்க வேண்டும் என்கிறாள். எடுத்த பின் திரும்பவும் இருக்கச் சொல்லி விட்டு இந்த கதவு அடித்துக் கொண்டிருக்கின்றது கதவுக்கு அடை வைக்கவேண்டும் கொஞ்சம் எழும்புகின்றாள் என்கின்றாள். சிறிது நேரத்தின் பின் திரும்பவும் திருப்பி அவரை இருக்க வைக்கின்றாள். இப்படி பலவிதமான செயல்களுக்கு உரலைப் பயன்படுத்துகின்றாள். வறுமையில் ஒரு பொருள் எவ்வாறு பல தேவைகளுக்கு பயன்படுத்தப்படுகின்றது என்பதை இக்கதை எடுத்துக் காட்டுகின்றது.

ஆனால் தற்காலத்தில் நானோ ரெக்னோலஜி மூலம் பல தேவைகளை ஒரு பொருளுக்குள் அடக்கும் தொழில் நுட்பம் ஓங்கி விட்டது. அதன் ஒரு வடிவம் கைத்தொலைபேசி. அக்காலத்தில் ஒரு பொருள் பல தேவைகளை நிறைவேற்றும் போது மற்றவர்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தவில்லை. பலனையே தந்தது. ஆனால் இன்று ஒரு பொருள் பல தேவைகளைப் பூர்த்தி செய்கின்ற போது சூழலைப் பாதிப்பதுடன் தமது உடல்நலத்தையும் உளநலத்தையும் பாதிக்கின்றது. இதுவே இயற்கையோடு ஒட்டிய வாழ்க்கைக்கும் செயற்கையோடு ஒட்டிய வாழ்க்கைக்குமிடையே உள்ள பேதம் ஆகும்.



அனைவருக்கும் தமிழ் சித்திரை புத்தாண்டு வாழ்த்துக்கள்




# உலக கோப்பை - கிரிக்கெட் 1996



23 ஆம் பக்கத் தொடர்ச்சி...

இலங்கைக்கு ஆதரவாக களமிறங்கிய PILCOM, வரலாற்றில் முதற் தடவையாக, இந்தியா–பாக்கிஸ்தான் அணி வீரர்கள் இணைந்த ஒரு combined அணியை கொழும்புக்கு practice match விளையாட அனுப்பியது. இலங்கை வந்த Wills XI அணியில், Sachin, Anwar, Sohail, Azhar (C), Ijaz, Jadeja, Latif, Waqar, Wasim, Kumble, Kapoor ஆகியோர் இடம் பெற்றிருந்தார்கள்.

இலங்கை அணி இடம் பிடித்திருந்த Group Aயில், இந்தியா, ஒஸ்ரேலியா, மேற்கிந்திய தீவுகள், கென்யா மற்றும் ஸிம்பாவே அணிகள் இடம் பெற்றிருந்தன. முதல் சுற்றில் விளையாட வேண்டிய 5 ஆட்டங்களில் 2 ஆட்டங்களில் walk over முறையில் இலங்கை அணிக்கு வெற்றிகள் மடியில் தானாக வந்து விழ, வேறு இரு போட்டிகளிலும் இலங்கை அணி எப்படியும் வெல்லும் என்று தெரிய, உலக கோப்பையில் முதலாவது



பந்து வீச முதலே இலங்கை அணி காலிறுதிப் போட்டிக்கு தகுதி கண்டு விட்டது. ஸிம்பாவே அணியுடனான முதலாவது போட்டியில் போட்டியில், அரவிந்த அடித்த 91 ஓட்டங்களின் பலத்தில் இலங்கை அணி 6 விக்கெட்டுக்களால் இலகுவாக வெற்றியீட்டியது. இலங்கையின் அடுத்த ஆட்டம், பத்து நாட்கள் கழித்து இந்தியாவோடு டெல்லி Ferozha Kotla மைதானத்தில் நடைபெற்றது.

இந்த match ஐ யாரு மறந்தாலும் இந்தியாவின் சகலதுறை ஆட்டக்காரரான Manoj Prabakhar மறக்கவே மாட்டார். Test போட்டிகளிலும் ODI களிலும் இந்தியாவின் opening batsman - opening bowler எனும் தனிச்சிறப்பு பெற்றவர் Manoj Prabakhar. அன்றைய இலங்கைய அணியுடனான ஆட்டத்தில் வழமையாக Open பண்ணும் Jadejaவை விட்டு Sachin ஓடு Prabakhar களமிறங்கினார். Prabakhar 7 ஓட்டங்கள் மட்டும் பெற்று ஆட்டமிழக்க, Sachink (137) Azhar ம் (72) இணைந்து 3rd wicket partnership ஆக அடித்த 175 ஓட்டங்கள் கண்களிற்கு விருந்து.



இந்தியா அடித்த 273 ஓட்டங்களை Sanath Jayasuriya (79) அடித்து நொறுக்கினார். Prabakhar வீசிய 4 ஓவர்களில் 47 ஓட்டங்கள், அதுவும் கடைசி இரண்டு ஓவர்களையும் Azhar, Prabakhar ஐ off-spin போட வைத்தத்தும், டெல்லிக்காரனான Prabakhar ற்கு டெல்லிச் சனமே கூ அடித்ததும், அந்த ஆட்டத்தோடு Prabakhar ஆடாமலே போனதும் 1996 உலக கிண்ணத்தில் நடந்தேறிய சிறப்பான சம்பவங்களில் ஒன்று.

இலங்கையின் கடைசி முதல் சுற்று ஆட்டம், கென்யாவுடன் இலங்கையின் சொதி வளவான கண்டியில் நடந்தது. இலங்கை அணியின் துடுப்பாட்ட வரிசை கென்யாவின் பந்து வீச்சாளர்களை வச்சு செஞ்ச இந்த ஆட்டத்தில் இலங்கை அணி அடித்த 398 ஓட்டங்கள் என்ற புதிய உலக சாதனை பத்தாண்டுகள் நிலைத்து நின்றதும் வரலாறு.

காலிறுதிப் போட்டியில் இலங்கை அணியிடம் சிக்கி இங்கிலாந்து அணி சின்னாபின்னமாகியது. தட்டுத்தடுமாறி இங்கிலாந்து அடித்த 238 ஓட்டங்களை rampaging இலங்கை அணி 40 ஓவர்களில் அடித்து முடித்து விட்டு, வீடு வந்து சேர்ந்தது. Faisalabadh ல் மீண்டும் Sanath (82 runs in 44 balls) ருத்ர தாண்டவம் ஆடினார்.

அரையிறுதிப் போட்டியில் இந்தியாவோடு, கொல்கொத்தாவில் மோதலிற்கு நாள் குறித்தாகி விட்டது. பொன் கிடைத்தாலும் புதன் கிடைக்காது என்பார்கள், ஓமோம், அவ்வாறான ஒரு புதன் கிழமையான 13 March 1996 அன்று தான் அந்த அரைகுறையில் நிறுத்தப்பட்ட அரையிறுதிப் போட்டி அரங்கேறியது.

அன்று இந்தியாவிற்கு என்ன நடந்தது, ஏன் தோற்றார்கள் என்பதற்கான பல்வேறு ஊகங்களும் வதந்திகளும் உலாவினாலும், Aravida de Silva எனும் ஆளுமை ஆடிய அதி சிறந்த ஒரு innings தான் இலங்கையை வெல்ல வைத்தது என்பதை உண்மையான கிரிக்கெட் ரசிகன் ஒத்துக் கொள்வான்.

Matc தொடங்க முதல் இந்திய பிரதம மந்திரியின் அலுவலகத்தில் இருந்து அஸாருக்கு அழைப்பு வந்தது என்பார் சிலர், இறுதியாட்டம் பாக்கிஸ்தானில் நடைபெற இருந்ததால் இந்திய உளவுத்துறை தலையிட்டது என்பார் வேறு சிலர், ஆண்டுகள் கழிந்து அஸார் match fixing ல் மாட்டுப்பட ''இப்ப விளங்குதடா'' என்பார் இன்னும் சிலர். என்ன தான் சொன்னாலும் இலங்கை அணி அன்று ஆடிய அதிசிறந்த ஆட்ட



மும், இந்திய ரசிகர்களின் கேவலமான செயலும், காம்ப்ளி விட்ட கண்ணீரும் யாராலும் மறக்க முடியாது.

கொல்கத்தாவில் Toss வென்றால் முதலில் bat பண்ண வேண்டும் என்பது எழுதப்படாத நியதி. இரவில் அங்கு dew விழும், pitch மாறும், chase பண்ணுவது கஷ்டம் என்பதை 1993 Hero Cup finalல் இந்திய அணி கண்கூடாக கண்டிருந்தது. அப்படியிருந்தும் Tossல் வென்ற அஸார் ஏன் முதலில் bat பண்ணவில்லை என்பது அஸாருக்கு மட்டும் தான் தெரியும். முதலாவது ஓவரில் சனத்தையும் கலுவையும் எதிர்பாராத விதமாக சிரிநாத் out ஆக்கி விட, அரவிந்த spinக்கு நன்றாக விளையாடுவார் என்று தெரிந்தும் ஏன் இரண்டாவது overl Kumble போட்டார் என்பதுவும் அஸாருக்கு மட்டும் தெரிந்த உண்மைகள்.

அரையிறுதி ஆட்டத்தின் தான் face பண்ணிய முதலாவது பந்திலேயே கலு ஆட்டமிழுந்து

26 ஆம் பக்கம் பார்க்க...






அனைவருக்கும் தமிழ் சித்திரை புத்தாண்டு வாழ்த்துக்கள்

## ஒப்பரேஷன் 'பூ மாலை'க்கு அடையாளமிட்ட பரதனின் 'நிதர்சனம்' தொலைக்காட்சி கோபுரம்

03 ஆம் பக்கத் தொடர்ச்சி...

ரூபவாஹினியின் அஞ்சல் கோபுரம் தகர்க்கப்பட்ட நிலையில், வடமாகாணத்தில் பரதனால் யாழ்ப்பாணம் கொக்குவில் பகுதியில் அமைக்கப்பட்டிருந்த தொலைக்காட்சி அஞ்சல் கோபுரம் வாயிலாகவே நிதர்சனம் தொலைக்காட்சியின் நிகழ்ச்சிகள் ஒளிபரப்பாகியிருந்தன. யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் பழைய மாணவரான பரதன், பாடசாலை நாட்களின் சதுரங்க விளையாட்டிலும் ஒரு சிறந்த மாணவனாக விளங்கினார்.

இலங்கையிலேயே அதிகளவு பிராந்திய ரீதியாக பத்திரிகைகள் வெளியாகும் மாகாணமாக வடமாகாணம் விளங்குவதோடு, இலங்கையின் முதலாவது பிராந்திய தொலைக்காட்சி என்ற பெருமைக்குரிய வகையில் வடக்கு–கிழக்கு மாகாணங்களில் டான் தொலைக்காட்சி சிறப்புற்றிருக்கின்றது.

எது எப்படியிருந்த போதிலும், பிராந்திய ரீதியாக இலத்திரனியல் ஊடகத்துறையை நான்கு தசாப்தங்களுக்கு முன்னரேயே உருவாக்குவதில் வெற்றிபெறமுடியம் என்பதனை முதலில் தமது சுய முயற்சியினால் நிரூபித்துக்காட்டியவர், தமது அறுபதாவது வயதில் 18.03.2021 லண்டனில் இவ்வுலக வாழ்வை நீத்த இராஜநாயகம் பரதன் என்பது குறிப்பிடத்தக்கது.






25 ஆம் பக்கத் தொடர்ச்சி...

மைதானத்தை விட்டு அகல முதலே, bat ஐ சுழற்றிக் கொண்டு சண்டியா மாதிரி அரவிந்த நடந்து வந்த விதமே இன்றைக்கு இருக்கு கச்சேரி என்று கட்டியம் கூறியது. அந்த match ஐ, அரை நாள் லீவு போட்டு விட்டு, கிரிஷாந்தனின் வீட்டில் பார்த்த ஞாபகம் இன்றும் நினைவில் நிழலாடுகிறது. TV பார்க்காத நேரங்களில் சீத்தை துணி போட்டு மூடி வைக்கப்படிருக்கும் அந்த 21' Sony TV யில் நண்பர்களோடு இருந்து இந்திய –இலங்கை அணிகளிற் கிடையிலான அரையிறுதிப் போட்டியை பார்த்ததை வாழ்க்கையில் மறக்க முடியாது.

உலக கோப்பையின் இறுதியாட்டம் ஞாயிற்றுக்கிழமை 17 March 1996ம் அன்று கராச்சியில் இடம்பெற்றது. அந்த ஞாயிற்றுக்கிழமை மத்தியானத்திலிருந்து, ஊரடங்கு போட்டதைப்



போல, கொழும்பு நகரமே வெறிச்சோடியது. என்றுமே கிரிக்கட் ஆட்டங்களை பார்க்காத பல இலங்கையர்கள் பார்த்த முதலாவது கிரிக்கெட் ஆட்டமாகவும் இந்தப் போட்டி அமைந்தது.

ஏற்கனவே முறுகுபட்டிருந்த ஒஸ்ரேலிய – இலங்கை அணிகள் மோதிய மோதல், உண்மையிலேயே scripted by god தான். முரளியை no ball call பண்ணியதில் தொடங்கிய சண்டை, ரணதுங்க "Waugh brothers are overrated" என்றும் "Warne is a crap bowler" என்றும் பகர்ந்த கருத்துக்களால் உரமேறியிருந்த சூழ்நிலையில் தான் அந்த இறுதியாட்டம் நடந்து முடிந்தது.

மீண்டும் Aravida de Silva (107*) களமிறங்கி இலங்கை கிரிக்கெட் அணியின் வரலாற்றை புரட்டிப் போட, அவருக்கு பக்க பலமாக Gurusinghe வும் Ranatungaவும் நின்றார்கள். கடைசியில் winning runsl Ranatunga third man நோக்கி தட்டி விட்டு எடுத்த கணத்தில் கொழும்பில் பட்டாசுகள் அதிரத் தொடங்கியது. Dec 5, 1995ல் யாழ்ப்பாணம் இலங்கை இராணுவத்தால் கைப்பற்றப்பட்ட போது வெடித்த பட்டாசுகளை விட பன்மடங்கு பட்டாசுகள் அந்த ஞாயிறு இரவில் வெடித்தது. வீதியில் இறங்கிய சனம், ஜெயவேவா என்று கத்திக் கொண்டு கட்டித் தழுவிக் கொண்டார்கள்.

பூட்டோ அம்மையாரின் கையால் வாங்கிய உலக கிண்ணத்தையும் இலங்கை அணியையும் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் இருந்து ஊர்வலமாக கொழும்புக்கு அழைத்து வர சுமார் ஆறு மணித்தியாலங்கள் எடுத்தது.

Sanath Jayasuriya விற்கு கிடைத்த Audi A4 காரை, அவர் வேலை செய்த Singer நிறுவனத்திற்கு முன்னால் இருந்த YWCA வளாகத்தில் தான் நிறுத்தி வைத்திருப்பார். YWC யுக்கு மத்தியானம் சாப்பிட வாற சனம், சனத்தின் காரை தொட்டுப் பார்த்து விட்டு போகும்.

இலங்கையின் பெரும்பான்மையான மக்கள் அந்த உலக கோப்பை வெற்றியை கொண்டாட, சிறுபான்மையானோர் கறுவிக் கொண்டு இருந்தார்கள். தாங்கள் பிறந்து வளர்த்த நாடு உலக கோப்பையை வென்று வந்திருக்கும் மகிழ்சியிலும் பெருமையிலும் இணைந்து கொள்ள அந்த சிறுபான்மையினரின் மனதில் ,இருந்த ஏதோ ஒரு உறுத்தல் தடையாக இருந்தது, இன்னும் இருக்கிறது.




09 ஆம் பக்கத் தொடர்ச்சி...

ஏற்படுவதுண்டு. இது நீரிழிவு நோயுடன் தொடர்புடையது. நீரிழிவு நோய்க்காக இன்சுலின் ஊசி, அல்லது மாத்திரைகள் எடுப்பவர்களிடையே தினமும் எடுக்கும் மாத்திரை அல்லது ஊசியின் அளவை தவறுதலாக கூடுதலாக எடுத்தால் நடக்கலாம். அவர்கள் விரதங்கள் இருப்பதாலும் நேரலாம். நீரிழிவு நோயாளிகள் விரதங்கள் இருப்பதும் உணவுகளைத் தவறவிடுவதும் கூடாது.

திடீரென ஏற்படும் அதிகமான இரத்தப் பெருக்கு மற்றொரு காரணமாகும். உதாரணமாக காயத்தினால் கடுமையாக குருதி வெளியேறுவது, கடுமையான மாதவிடாய் பெருக்கு, மூலத்திலிருந்து திடீரென இரத்தம் ஓடுதல் மற்றும் வெளிப்படையாகத் தெரியாது உடலின் உள்ளே நடக்கும் குருதிப்பெருக்குகள் காரணமாகவும் நடக்கலாம். உதாரணமாக– குடற் புண், ஈரல் சிதைவு, புற்றுநோய்கள் எனப் பலவாகும். எனவே காரணம் எதுவாக இருந்தாலும் திடீர் மயக்கம் ஏற்பட்டால் மருத்துவ ஆலோசனை பெறுவதன் மூலம் அது ஆபத்தான நோயின் வெளிப்பாடு அல்ல என்பதை நிச்சயத்துக் கொள்ளலாம்.

உங்கள் வீட்டில் ஒருவருக்கு திடீர் மயக்கம் ஏற்பட்டால் மேற் கூறிய எவையாவது காரணமாக இருக்கக் கூடும்.

மருத்துவரிடம் செல்லும்போது, இவற்றில் ஏதாவது காரணமாகலாம் என நீங்கள் சந்தேகித்தால் அவரிடம் மறக்காமல் சொல்லுங்கள். மயக்க முற்றவர் வழமையாக உட்கொள்ளும் மருந்துகள், அவற்றின் அளவுகள் ஆகியவற்றையும் மருத்துவருக்கு அறியத் தாருங்கள்.

### மருத்துவம்

சாதாரண மயக்கங்கள் தாமாகவே குணமாகிவிடும் என்பதை அறிந்தோம். மயக்கங்களுக்கு வேறு காரணங்கள் இருப்பின் அவற்றைக் கண்டறிந்து நிவர்த்தி செய்ய மருத்துவர் வழி கூறுவார்.

மயக்கம் வருவது போலிருந்தால் என்ன செய்யலாம்.

நிற்கவோ இருக்கவோ செய்யாது உடனடியாக அந்த இடத்திலேயே படுங்கள். முடியுமானால் கால்களை ஒரு நாற்காலியில் உயர்த்தி வையுங்கள். மயக்கம் தெளிந்தாலும் உடனடியாக திடீரென எழுந்து நிற்காதீர்கள். சற்று தலையை உயர்த்தி உட்காந்து பாருங்கள். சுகமாக இருந்தால் மட்டும் எழுந்திருங்கள். போதிய நீராகாரம் எடுப்பதும், மதுபானத்தைத் தவிர்பதும், காலுக்கு ஸ்டொகிங் அணிவதும், இதைத் தடுப்பதற்கு உதவும்.











அனைவருக்கும் தமிழ் சித்திரை புத்தாண்டு வாழ்த்துக்கள்

# தட்டிக் கழிப்பவர்களாய் அன்றி தட்டிக் கொடுப்பவர்களாக இருங்கள்

மாலினி மோகன்
(கொட்டகலை– இலங்கை)



தலை குனிந்து நடப்பதெல்லாம் தலை நிமிர்ந்து வாழ்வதற்கே என்பது ஆன்றோர் வாக்கு. இதன் மூலமாக புலப்படுவது நாம் மற்றவர்களை மதிக்கின்ற, கீழ்படிவு கொண்ட, ஒழுக்கமுள்ளவர்களாக வாழ்ந்தோமாக இருந்தால் எல்லோராலும் போற்றப்படுகின்ற சமூகத்தில் மதிக்கப்படுகின்ற ஒருவராக உருவாக முடியும்.

ஒருவர் ஒரு வெற்றியை பெறுவதாக இருந்தால் அவருக்குள் இருக்கின்ற விடாமுயற்சி, ஊக்கம் இவற்றுக்கப்பால் அவருக்கு பின்னால் அவரை உற்சாகப்படுத்துகின்ற, ஊக்கப்படுத்துகின்ற சக்தி ஒன்று இருந்து கொண்டே இருக்கும். அவ்வாறு இருந்தால் தான் சாதிக்க முடியும். இல்லையாயின் சக்தி இழந்து சோம்பேறிகளாக மாறிவிடுவோம்.

தோல்வி அடைகின்ற பலரை நாம் அவதானிக்கின்ற போது ஒரு விடயத்தில் தோல்வி அடைந்து விட்டால் மீண்டும் முயற்சி செய்து பார்க்கவும் மாட்டார்கள். ஆனால் ஒரு சிலர் மட்டும் எத்தனை தரம் விழுந்தாலும் முயற்சி செய்தே பார்ப்பேன் என்று முயற்சி செய்து வெற்றி கண்டிருக்கின்றனர். உதாரணமாக தோமஸ் அல்வா எடிசன் பல தடைவ முயற்சி செய்து தான் மின் குமிழை கண்டுபிடித்துள்ளான். அவர் அப்போது ஒரு தடவையுடன் தனது முயற்சியை கைவிட்டிருந்தால் இன்று நாம் ஒளியைக் கட்டிருக்க முடியாது. அவரை பற்றி பேசி இருக்கவும் முடியாது.

ஒவ்வொருவரும் வெற்றியாளர்கள் தான் அவ் வெற்றியை நிலை நாட்டுவதற்கு அவர்களுக்கு பின்னால் உள்ள சக்தி வலுவிழுந்து இருக்கின்றது. அதனால் தான் அவ்வெற்றியில் சற்று மாற்றம் ஏற்படுகின்றது. இம்மாற்றத்திற்கு காரணம் நாம் ஒவ்வொருவரும் தான். ஏனெனின் தோல்வி அடைகின்ற ஒருவரை பார்த்து மீண்டும் முயற்சி செய். அதற்கு பின்னால் நாம் இருக்கின்றோம். இது முதல் தடைவ தான், இதன் மூலம் ஒரு அனுபவம் கிடைத்திருக்கின்றது. என்று ஆறுதல் வார்த்தைகள் கூறுகின்றவர்களாக இருக்கின்றோமா? என்றால் மிகக் குறைவு இதற்கு மாறாக கிராம புறங்களில் அதிகமாக பார்த்தால் கல்வியா சரி? விளையாட்டா சரி? மற்ற விடயங்களா சரி? இதற்கு உனக்கு சரிவராது விட்டுட்டு வேற வேலையைப் பாரு. என்ற கூடாத வார்த்தைக்களையும் கூறிதட்டிக் கழிக்கின்றவர்களாக பல இருக்கின்றனர். இதனால் சரித்திரம் படைக்க வேண்டும் என்று ஆதங்கம் கொண்ட எத்தனையோ சாதனையாளர்கள் இன்று சாதாரண மனிதர்களாக இருக்கின்றனர்.

எம்மக்கள் பலரிடத்தில் இருக்கின்ற ஓர் பண்பு பிறர் உயர்ந்து விடக்கூடாது, அல்லது சாதனை படைத்து விடக்கூடாது, என்கின்ற கீழ்தரமான சிந்தனை இதற்காக வேண்டி பல கீழ்தரமான பல செயற்பாடுகளை செய்து மற்றவர்களை கீழ் நிலைக்கு கொண்டுவர சிந்திப்பது ஆனால் வெளியில் நல்லவர்களாகவும் தங்களைக் காட்டிக்கொள்வது, ஒருவர் உயர்ந்து கொண்டு சென்றால் அவரை எவ்வாறாவது தட்டிக் கொடுத்து முன்னேற்ற வேண்டும் என்று நினைக்கின்ற மனிதப் பண்பு மிகக்குறைவு இதனால் தாங்களும் உயரவும் மாட்டார்கள்.

**ஒருவர் சாதனை படைக்கின்றார் எனின் அல்லது உயர்ச்சி அடைக்கின்றார் எனின் அது எம் ஒவ்வொருவருக்கும் கிடைக்கும் வெற்றியாகத்தான் அது இருக்குமே தவிர எவ்விதத்திலும் எம்மை பாதிக்கும் ஒன்றாகாது, ஆனால் மற்றவரை உயர விடக்கூடாது, சாதிக்கவிடக் கூடாது, என்று சிந்திக்கின்ற அதற்காக செயற்படுகின்ற ஒவ்வொரு நிமிடமும் எம்மை அறியாமலே அழிவுக்குள் இட்டுச்செல்லும்.**

நவீனத்துவமான உலகில் பணம், பதவி என்று பேராசை பிடித்து உணவு உண்பதற்குகூட நேரம் இல்லாதவர்களாக பலர் உள்ள போதும் சமூகத்திற்காக சேவை செய்கின்ற மனப்பாங்கு ஒரு சிலருக்குத்தான் உண்டு. ஓர் இரண்டு பேர் சமூகத்திற்காக சேவை செய்யவென்று களமிறங்கினாலும், அவர்களை தட்டிக் கொடுத்து பக்கபலமாய் இருந்து சமூகத்தை ஒன்று சேர்ந்து உயர்த்துவோம் என்று சிந்திக்கின்ற தன்மை கொண்டவர்கள் மிகக்குறைவு, அதை விட்டு எவ்வாறு இவர்களை குறைகூறுவது, பிழை பிடிப்பது என்று நினைக்கின்ற சமூகமே உண்டு. இச்சமூக சேவை யாருக்காக செய்யப்படுகின்றது? ஏன் செய்யப்படுகின்றது? இதனால் எமக்கு கிடைக்கும் நன்மை என்ன? என்பது பற்றிய எவ்வித சிந்தனையும் இருக்காது. ஒரே சிந்தனை சிறப்பாக வேலை செய்கின்றனர். கெட்டிக்காரர்கள் என்று ஒரு சில நல்லவர்கள் பேசினால் போதும் இவர்களை எவ்வாறாவது வீழ்த்த வேண்டும் என்று சிந்திக்கின்றவர்களே இம்மண்ணில் பலர் உளர். இதனை எமது மொழி நடையிலே கூறுவதாயின், வைக்கோலில் நாய்; படுத்துக்கொண்டு தானும் அதனை உண்ணாமல் மாட்டையும் உண்ணவிடாமல் துரத்துவது போன்று தான் இப்படியானவர்களின் சிந்தனை.



மக்கள் சேவை மகேசன் சேவை என்பது ஆன்றோர் வாக்கு அதாவது மக்களுக்கு செய்கின்ற சேவைகள் இறைவனுக்கு செய்கின்ற சேவைக்கு சமமனாது என ஒப்பிடுகின்றனர். அவ்வாறான புனிதமான சேவைக்காக தங்களை அற்பணிக்கின்ற, விட்டுக்கொடுக்கின்ற, உண்மையாக செயற்படுகின்ற உணர்வாளர்களை வரவேற்க வேண்டும். வாழ்த்த வேண்டும். தட்டிக்கொடுக்க வேண்டும். அவ்வாறு விட்டுக்கொடுப்பவர்களாகவும், தட்டிக்கொடுப்பவர்களாகவும் இருந்த சமூகங்களே இன்று பாரிய வளர்ச்சியை கண்டிருக்கின்றன.

இவ்வாறான சமூக மாற்றங்கள் எமது சமூகம் காண்பதற்கு இங்குள்ள ஆர்வலர்கள், பெரியோர்கள், கல்விச் சமூகம், மாறவேண்டும். இவர்களது மனநிலை மாற வேண்டும். முயற்சியாளர்களையும், புத்துருவாக்கம் புனைபவர்களையும், சாதனை படைக்க துடிக்கின்றவர்களையும், தட்டிக்கொடுத்து ஊக்கப்படுத்தி உயர்த்த வேண்டும். அத்துடன் தமக்குள் இருக்கும் அனுபவங்களையும் அறிவுத்திறனையும் வழங்கி வெற்றியடையச் செய்து சமூகத்தை புகழ்ச்சி அடைய செய்யவேண்டும்.

சாதனை படைக்க துடிக்கும் இளைஞர் யுவதிகளுக்கு ஒரு முதுமொழியை நினைவில் கொள்ளுங்கள், போற்றுபவர் போற்றட்டும் தூற்றுபவர் தூற்றட்டும் எமக்கு பின்னால் ஒரு சக்தி இருக்கின்றது அச்சக்தி எமக்கு தட்டிக் கொடுக்கும் என்று நினைத்து உங்கள் பயணத்தை தொடர்ந்து கொண்டே இருங்கள் வெற்றி நிச்சியம். நாளை உங்களுக்கு பின்னால் இன்னும் பல சக்திகள் ஒன்று சேரும்.



அனைவருக்கும் தமிழ் சித்திரை புத்தாண்டு வாழ்த்துக்கள்




# தலைவி ஜெயலலிதாவின் வாழ்க்கை வரலாறு!



முதலமைச்சர் ஜெயலலிதாவின் வாழ்க்கை வரலாற்றை அடிப்படையாக கொண்ட படம் தான் ‘தலைவி’. இந்த மாதிரி வாழ்க்கை வரலாற்று படத்திற்கு எப்போதுமே ஒரு தனி ரசிகர்களும், எதிர்பார்ப்பும் இருக்கத்தான் செய்கின்றனர்.

மற்ற படங்களை விட இந்த வரலாற்று படத்திற்கு கூடுதல் எதிர்பார்ப்பு இருக்கின்றன.அதற்கு தேர்தல் நெருங்குவதும் ஒரு முக்கிய காரணம்.

ஜெயலலிதாவின் வாழ்க்கை வரலாற்றை அடிப்படையாக கொண்ட படம் தான் தலைவி. வரலாற்று படம் என்றாலே இருக்கும் எதிர்பார்ப்பை விட இந்த படத்திற்கு கூடுதல் எதிர்பார்ப்பு இருக்கின்றது. காரணம் முதலமைச்சரின் வாழ்க்கை என்பதால் தான். அப்படத்தில் ஜெயலலிதா வேடத்தில் நடிக்கிறார் கங்கனா. ஏற்கனவே இப்படத்தின் பல புகைப்படங்கள் வெளிவந்து அனை





வரையும் அதிக எதிர்பார்ப்பை தூண்டியது என்பது குறிப்பிடத்தக்கது.

## கூடுதல் பலம்

அரசியல் மட்டும் இல்லாமல் ஜெயலலிதாவிடம் இருக்கும் அறிய பொக்கிஷமான விஷயங்களையும் இப்படத்தில் கொண்டுவந்துள்ளார் இயக்குனர் விஜய். பரதநாட்டியம், தமிழ் மொழியைக் கற்றுக்கொள்வதிலிருந்து ஜெயலலிதாவின் பழக்கவழக்கங்களை சரியாகப் பெறுவதற்கு பல மணிநேரம் செலவழிப்பதில் இருந்து, கங்கனா இப்படத்திற்காக உழைத்து வருகிறார்.


## எம்.ஜி.ராமசந்திரன்



கங்கனா மற்றும் அரவிந்த் சுவாமியின் கதாபாத்திரத்தின் ஜெயலலிதா மற்றும் எம்.ஜி.ராமச்சந்திரன் ஆகியோரின் வினோதமான ஒற்றுமை ஒரு முக்கிய பேசும் இடமாக இருந்து வருகிறது, மேலும் வாழ்க்கை வரலாற்றின் தோற்றம் மற்றும் உணர்வைச் சுற்றி நிறைய எதிர்பார்ப்பு உள்ளது.

மற்றும் பிரபல நடிகரின் வாழ்க்கையிலிருந்து எப்படிச் சின்ன நிகழ்வுகள் அரசியல்வாதியாக மாறியது என்பதை தத்ரூபமாக சித்தரிக்கப்பட்டுள்ளது.

உலக அளவில் புகழ் பெற்ற முக்கியமான நபரின் கதை என்பதாலும்,அதில் இருக்கும் முக்கிய நட்சத்திர பட்டாளங்களாலும் இப்படம் பெரிய அளவில் வெற்றி பெரும் என்று தயாரிப்பாளர்களின் தரப்பில் கூறுகின்றனர். சமீபத்தில் ஜெயலலிதாவின் பிறந்தநாள் அன்று , இப்படத்தை தயாரிப்பாளர்கள் பான் இந்தியாவில் திரையரங்குகளில் 2021 ஏப்ரல் 23 ஆம் தேதி வெளியிடுவதாக அறிவித்தனர். இந்தி, தமிழ் மற்றும் தெலுங்கு மொழிகளில் உலகளவில் வெளியிடப்பட உள்ளது. இப்படத்தின் நாயகியான கங்கனா பிறந்தநாள் மார்ச் 23 ஆம் தேதி அன்று ட்ரைலரை வெளியிட திட்டமிட்டு உள்ளனர். இதில் கூடுதல் கவனம் என்னவென்றால், எலெக்ஷன் நெருங்கும் வேளையில் வெளியிடுவதால் ரசிகர்கள் மத்தியில் மட்டும் அல்லாமல் தொண்டர்களின் மத்தியிலும் இப்படத்தை பற்றிய எதிர்பார்ப்பு அதிகமாக நிலவி





வருகின்றது. இந்த தேர்தலிலும் எம்.ஜி.ஆர் ஜெயலலிதா இந்த வடிவத்தில் பிரச்சாரம் செய்கிறார்கள்.









# சகுந்தலையாக சமந்தா






சகுந்தலை புராண கதை, சினிமா படமாக தயாராகிறது. படத்துக்கு சகுந்தலம் என்று பெயரிட்டுள்ளனர். தமிழ், தெலுங்கு மொழிகளில் தயாராகும் இந்தப் படத்தை குணசேகர் இயக்குகிறார்.

இவர் ஏற்கனவே அனுஷ்கா நடித்து தமிழ், தெலுங்கில் வெளியான ருத்ரமா தேவி படத்தை இயக்கியவர்.

சகுந்தலம் படத்தில் சகுந்தலா கதாபாத்திரத்தில் சமந்தா நடிக்கிறார். அவருக்கு ஜோடியாக துஷ்யந்தன் கதாபாத்திரத்தில், மலையாள இளம் நடிகர் தேவ் மோகன் நடிக்கிறார்.



# அஜித்தின் ‘50’ இல் வலிமை

வலிமை படத்தின் இறுதிக்கட்டப் பணிகள் மும்முரமாக நடைபெற்று வருகின்றன. ஆனால் முடியும் தருவாயில் உள்ள ‘வலிமை’ படத்தில் யாரெல்லாம் அஜித்குமாருடன் நடிக்கிறார்கள் என்ற தகவலைக் கூட படக்குழுவினர் இன்னும் வெளியிடவில்லை.

இந்நிலையில் முதன்முறையாக ‘வலிமை’ குறித்த தகவலைப் படத்தின் தயாரிப்பாளர் போனி கபூர் அதிகாரப்பூர்வமாக அறிவித்திருக்கிறார்.

இதுதொடர்பாக அவர் தனது டுவிட்டரில், அஜித்தின் 50ஆவது பிறந்த நாளான மே 1 வலிமை பர்ஸ்ட் லுக் போஸ்டர் மற்றும் விளம்பரங்களும் வெளியாகும் என்று அதிகாரபூர்வமாக அறிவித்திருக்கிறார்.

# சிம்ரனுக்கு வரும் வில்லி வாய்ப்புகள்



தமிழ் திரையுலகில் 1990 மற்றும் 2000-களில் முன்னணி நடிகையாக வலம் வந்த சிம்ரனுக்கு திருமணத்துக்கு பிறகு கதாநாயகி வாய்ப்புகள் இல்லை.

இதனால் குணச்சித்திர வேடங்களில் நடிக்க தொடங்கினார். அதன்பிறகு வில்லியாக மாறினார். சிவகார்த்திகேயனின் சீமராஜா படத்தில் காளீஸ்வரி என்ற கதாபாத்திரத்தில் வில்லியாக மிரட்டினார்.

இப்போது பிரசாந்த் கதாநாயகனாக நடிக்கும் அந்தகன் படத்திலும் வில்லி வேடம் ஏற்றுள்ளார்.

கள்ளக்காதலனுடன் சேர்ந்து கணவனை கொலை செய்யும் கதாபாத்திரத்தில் சிம்ரன் நடிக்கிறார். இந்த கதாபாத்திரத்தில் இந்தியில் தபு நடித்துள்ளார். சிம்ரன் கள்ளக் காதல் கொலையாளியாக நடிப்பது அவரது ரசிகர்களுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. மேலும் சில படங்களில் வில்லியாக நடிக்கவும் அவருக்கு வாய்ப்புகள் வந்துள்ளன.



# ஜுலையில் “கோப்ரா”

இயக்குநர் அஜய் ஞானமுத்து இயக்கத்தில் விக்ரம் நடித்துள்ள படம் கோப்ரா.சமீபத்தில் ரஷ்யாவில் நடைபெற்ற கோப்ரா படப்பிடிப்புகள் முடிவடைந்த நிலையில், தற்போது போஸ்ட் புரொடெக்சன் வேலைகள் நடைபெற்று வருகின்றன.

இப்படம் வரும் மே மாதம் ரம்ஜான் பண்டியையொட்டி வெளியாகும் எனக் கூறப்பட்ட நிலையில் பின்னணி வேலைகள் அதற்குள் முடியாது என்பதால் கோப்ரா படம் வரும் ஜூலை மாதம் வெளியிட படக்குழு திட்டமிட்டுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது .

# வெளிவர முடியாத பிரபுதேவா படங்கள்

நடன இயக்குனராக இருந்த பிரபுதேவா 1994 இ ல் வெளிவந்த இந்து படத்தின் மூலம் கதாநாயகனாக அறிமுகமானார்.

இத்தனை வருடங்களாகவும் நாயகனாக நடித்துக் கொண்டிருப்பது வரவேற்க வேண்டிய ஒன்று தான். ஆனாலும், அவர் நடித்துள்ள மூன்று படங்கள் எப்போது வெளியாகும் என தடுமாறி நின்று கொண்டிருக்கின்றன.

ஹிந்தியில் முன்னணி நட்சத்திரங்களை இயக்கும் இயக்குனராக இருந்தாலும் அவர் நடித்து முடித்துள்ள யங் மங் சங் படத்தின் பெயர் அறிமுகம் 2019ல் நடந்தது.. அதற்குப் பிறகு படம் பற்றிய எந்த அப்டேட்டும் அதிகாரப்பூர்வமாக வெளியாகவில்லை.

அடுத்து பொன்மாணிக்கவேல் என்ற படத்தின் டீசர் 2019ஆம் ஆண்டிலும் டிரைலர் 2020ம் ஆண்டிலும் வெளியானது. மற்றொரு படமான தேள் என்ற படத்தின் படப்பிடிப்பும் ஏறக்குறைய முடிவடைந்து அப்படியே நிற்கிறது. இந்த மூன்று படங்கள் அல்லாமல் பாகீரா, ஊமை விழிகள் ஆகிய படங்களில் நடித்து வருகிறார் பிரபுதேவா.

எத்தனையோ படங்கள் வெளிவராமல் தவிப்பதற்கும் முன்னணி நடிகர், இயக்குனரான பிரபுதேவாவின் படங்கள் தவிப்பதற்கும் வித்தியாசம் இருக்கிறது என்கின்றனர் திரையுலகினர்.




Deutsche Bank

# Willkommen in Ihrer Filiale Duisburg.



Janagran Mahendran
Berater Private Banking

Als Kunde erwarten Sie heute nicht nur erstklassige Finanzlösungen, sondern eine faire und verständliche Beratung. Wir wollen Ihren Ansprüchen gerecht werden – und haben uns zum Ziel gesetzt, Sie als verlässlicher und leistungsstarker Partner auf Ihrem privaten und geschäftlichen Weg zu begleiten. Dafür verbinden wir die Reichweite, Erfahrung und Leistungsstärke eines global führenden Finanzdienstleisters mit der Zuverlässigkeit und Kundennähe einer Hausbank. Sprechen Sie jetzt mit uns.

Filiale Duisburg
Königstraße 7–11, 47051 Duisburg
Telefon (0203) 9922-521
janagran.mahendran@db.com


Deutsche Bank
Jetzt bis zu
150 €
Jubiläumsprämie*
„Negativzinsen? Und jetzt?“
Eine Welt ohne Zinsen braucht neue Antworten.
Machen Sie den ersten Schritt gegen Negativzinsen mit
ROBIN oder unserem Fondssparplan InvestSparen.
#PositiverBeitrag
*Gilt für Neukunden und Deutsche Bank Kunden ohne Depot sowie für ausgewählte
Aktionsprodukte. Mehr Informationen in jeder Deutsche Bank Filiale oder
unter deutsche-bank.de. Diese Werbung ersetzt keine individuelle Beratung.

# EurAsian-Tour

VALUTRANS MONEY TRANSFER

EurAsian-Tour Further Str.146 41462 Neuss
Rishi Ganeshamoorthy | Rishi 0174 96 44 965
Tel:02131 7387 83 Fax:02131 73 87 84 | info@eurasian-tours.com

இனிய
சித்திரை புத்தாண்டு
வாழ்த்துக்கள்

# Jasmine Silk House

என்றும் எம்முடன் இணைந்து
இருங்கள். உங்களுக்கு சேவை
செய்ய காத்திருக்கிறோம்.
தொடர்பு இலக்கம்: 01731937325

ஆடைகளின் ராணி

Tel: 02102 844744
HP: 0173 1937 325

"Jasmine Silk House"
Fester Str.50- 40882 Ratingen

சித்திரை புத்தாண்டு
வாழ்த்துக்கள்

# Asia Bazar

துரித பணமாற்றுச்சேவை

ஆசிய, ஆபிரிக்க உணவு வகைகள்
வியாழன், சனிக்கிழமை தோறும்
இலங்கை, இந்திய உடன்
மரக்கறிவகைகள் கடல் உணவுப்
பொருட்கள் இன்னும் பல...

Ria Money Transfer
VALUTRANS MONEY TRANSFER
MoneyGram

உரிமையாளர்: பா.கணேஷ்
An der Stadt Mauer 2-4 41061 Mönchengladbach
Tel: 02161 208303 | Fax: 02161-309282

இனிய சித்திரை
புத்தாண்டு
வாழ்த்துக்கள்

# PIRRUNTHA SILKS

Exclusive Indian Clothing & Jewelry

Ludwig str.87a
70197
Stuttgart

இனி தமிழ்
புத்தாண்டு
வாழ்த்துக்கள்

தரம்மிக்க தங்க நகைகள்
நங்கையர் விரும்பும்
நவீன டிசைன்களில்
அமைந்த சேலைகள்
மற்றும் இமிற்றேசன்
நகைகள் அனைத்திற்கும்
நீண்ட கால நம்பிக்கை
மிக்க ஸ்தாபனம்
பிருந்தாஸ்

Stuttgart தமிழ்...

Tel: 0711 615 8976/ 0170 334 4059

# Shakthy Foundation

துவாரகமாய் முதியோர் இல்லம்

SHAKTHY FOUNDATION

தொடர்புகளுக்கு:-
Dwarakamal Senioren WG
Alpenroder Str.59 65936 Frankfurt am Main, Germany
Tel: 0152-14069504 Mrs.Nava (Resha)

சீரடி பாபாவின் அருளால் ஜேர்மனி பிராங்க்பார்ட் நகரில் 01.10.2020 ஆம் திகதி துவாரகமாய் முதியோர் இல்லம் உருவாகியுள்ளது. எமது அன்பார்ந்த சகோதர சகோதரிகளே உங்களுக்கு ஓர் நற்செய்தி. உங்கள் பெற்றோரை உங்களைப் போலவே அன்பாக அரவணைத்து பராமரிப்போம் கவலையை விடுங்கள் பிராங்க்பார்ட் நகரில் 01.10.2020 ஆம் தகதி முதல் துவாரகமாய் முதியோர் இல்லம் அமைந்துள்ளது. இங்கு தமிழில் உரையாடி நமது தமிழ் உணவுடன் முதியவர்கள் பராமரிக்கப்படுகின்றார்கள். இதற்கு அருகாமையில் அழகான பூங்கா மற்றும் ஸ்ரீ நாகபூசணி அம்மன் ஆலயம் மற்றும் சித்தி விநாயகர் ஆலயம் அமைந்தள்ளது. இல்லத்தினால் பெறும் வருமானங்கள் 28.03.2018 திரு. திருமதி. நவநீதன் நிஷாந்தியாவினால் இலங்கையில் உருவாக்கப்பட்ட மாணவர் விடுதிக்கு செலவு செய்யப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம். இவ்விடுதியில் வறுமைக் கோட்டிற்கு கீழுள்ள பல மாணவர்கள் கல்வி கற்று வருகின்றார்கள்.

Shakthy Foundation
Acc No:
173020027815
HATTON
NATIONAL BANK
Trincomale,
Srilanka

Shakthy Foundation T/M/Chennaiyoor, Central College, Mutur, Trincomale, Srilanka. | S.Rajathurai: +94 77 338 4637

# SARAVANAA BHAVAN®

HSB

WORLD'S NO.1 INDIAN VEGETARIAN RESTAURANT CHAIN

புதிய இடத்தில்!! புதிய பொலிவுடன்!!

069-97 693 374
info@saravanaabhavan.de
kaiserstraße 68, 60329 Frankfurt am Main

தமிழ் சித்திரை புத்தாண்டு வாழ்த்துக்கள்

India | Singapore | Malaysia | Thailand | Hong Kong | U.A.E | K.S.A. | Oman | Qatar | Bahrain | Kuwait | U.K | France | Germany | Australia | South Africa | Canada | U.S.A

# STAR IMPEX

Lebensmittel Grosshandel e.K.

StaR Impex : Inh : K.Sivasubramaniam

Tel: 0231 860 26 96

AGAM அ.க.ம் | Nila | Double Horse | Aachi | BTM | Rabeena

Franziusstrasse 150 (TOR3) DE -44147 Dortmund
Tel: 0231/8602696| Fax: 0231/8602698

இனிய தமிழ் புத்தாண்டு
நல்வாழ்த்துக்கள்